விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka




# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 221 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 12 திங்கட்கிழமை (28.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## புதிய பிரதம நீதியரசராக பத்மன் சூரசேன நியமனம்

(கொழும்பு)

புதிய பிரதம நீதியரசராக ப்ரீத்தி பத்மன் சூரசேன நேற்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்னிலையில் பதவியேற்றார்.

இவர் நாட்டின் 49ஆவது பிரதம நீதியரசர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை காலமும் பிரதம நீதியரசராகச்

15ஆம் பக்கம் பார்க்க



## இனங்காணப்பட்டவற்றுள் நேற்று 5 என்புத் தொகுதிகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் அமைந்துள்ள மனித புதைகுழிகளில், நேற்று ஞாயிற்றுக்கிழமை ஐந்து எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று புதிதாக எலும்புக்கூட்டுத் தொகுதிகள் எதுவும் அடையாளம் காணப்படாத நிலையில், ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட 5 தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 7 நாட்களில் மட்டும் 30 தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

15ஆம் பக்கம் பார்க்க

### படையினரால் கொல்லப்பட்டவர்களைப் புதைத்தோம்

# சோமரட்ணவின் சாட்சியம் ஊடாக செம்மணியை அணுக வேண்டும்

## மக்கள் போராட்ட முன்னணி வலியுறுத்து



*(யாழ்ப்பாணம்)*

கிருஷாந்தி குமாரசுவாமி கொலையின் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட சோமரட்ண ராஜபக்ஷ என்பவர் நேரடியாக அளித்த சாட்சியம் ஊடாக நாங்கள் செம்மணியை அணுகவேண்டும் என மக்கள் போராட்ட முன்னணியின் அரசியல் செயற்பாட்டாளர் ராஜ்குமார் ரஜீவ்காந் தெரிவித்துள்ளார்.

*(16ஆம் பக்கம் பார்க்க)*

## நல்லூரானுக்கு நாளை கொடியேற்றம்



15ஆம் பக்கம் பார்க்க

## நெல்லியடியில் கறுப்பு ஜூலை நினைவேந்தல்



02ஆம் பக்கம் பார்க்க

### இனியபாரதியின் அலுவலகத்தில்

## சி.ஐ.டி விசேட சோதனை

### முக்கிய சகாவும் கைது

(மட்டக்களப்பு)

இனியபாரதி என அழைக்கப்படும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கே.புஸ்பகுமார் பயன்படுத்திய அலுவலகங்கள் மற்றும் முகாம்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கடுமையான சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இதன்போது இனியபாரதியின் முக்கிய சகாவான திருக்கோவில் பிரதேச சபை உறுப்பினர்

15ஆம் பக்கம் பார்க்க

## ஈஸ்டர் தாக்குதல் விபரம் விரைவில் வெளியிடப்படும்

### அநுர அரசு உறுதி



(கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய முக்கிய புள்ளிகளின் விபரம் விரைவில் பகிரங்கப்படுத்தப்படும் என பெருந்தோட்ட அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## மோ.சைக்கிள் விபத்து; இளம் ஆசிரியர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா பரசங்குளம் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் கணித பாட ஆசிரியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த ஆசிரியர் நேற்று

15ஆம் பக்கம் பார்க்க



### தீயில் எரிந்த நிலையில் முதியவர் சடலமாக மீட்பு

(அல்லைப்பிட்டி)

அல்லைப்பிட்டிப் பகுதியில் நேற்றுக் காலை படுக்கையி லேயே எரிந்த நிலையில் வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரம் வெண்புரவியைச் சேர்ந்த 84 வயதுடைய மணியாஸ்

15ஆம் பக்கம் பார்க்க

### பொலிஸ் நிலையத்தில் சந்தேக நபர் பலி

## இரு பொலிஸ் உத்தியோகத்தர் அதிரடியாகப் பணியிடை நீக்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் உயிரை மாய்த்துக் கொண்டதாகக் கூறப்படும் சம்பவத்தையடுத்து, குறித்த பொலிஸ் நிலையத்தின் இரு பொலிஸ் உத்தியோகத்தர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தின்போது, பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்ததாகக் கூறப்படும், உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் பொலிஸ் கான்ஸ்டபிள்

15ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சீர்திருத்தம் என்பது பாடங்களை மாற்றுவதல்ல

## ஒட்டுமொத்த முறைமையை மாற்ற வேண்டும் – பிரதமர்



(கொழும்பு)

கல்விச் சீர்திருத்தம் என்பது வெறுமனே புதிய பாடப் புத்தகங்களை அறிமுகப்படுத்துவது அல்ல. மாறாக, ஒட்டுமொத்த கல்வி முறைமையையும் மாற்றி அமைப்பதாகும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

"வளமான நாட்டுக்காக பெண்களாகிய நாம் அனைவரும் ஒன்றாக" என்னும் தலைப்பில் தேசிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட மகளிர் ஒன்றியம் இரத்தினபுரி நகர மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த கருத்துப் பரிமாற்றக் கலந்துரையாடலில் கலந்துகொண்டபோது பிரதமர் இவ்வாறு கூறினார்.

அங்கு கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக மேலும் உரையாற்றிய பிரதமர், பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் சுமையாக அமையாத கல்வி முறைமையை உருவாக்குவது எமது அரசியல் இயக்கத்தினுள் தொடர்ச்சியாகக் கலந்துரையாடப்பட்ட ஒரு விடயமாகும்.

இது தமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கல்விச் சீர்திருத்தமானது புதியதோர் பாடப்புத்தகத்தை அறிமுகப்படுத்துவது மட்டுமல்ல, ஒட்டுமொத்த கல்வி முறைமையையும் மாற்றியமைக்கும் ஒரு செயற்திட்டமாகும்.

நாம் தற்போதைய முறைமைக்குள் கண்டிருக்கும் பல முக்கிய பிரச்சினைகள் உள்ளன. பரீட்சைகளை மையமாகக் கொண்ட இக்கல்வி முறைமையினால் சிறார்கள் மீது ஏற்படும் அழுத்தம், அதனால் பெற்றோருக்கு ஏற்படும் அழுத்தம், அதனால் ஏற்பட்டிருக்கும் போட்டியினால் உருவாகி இருக்கும் தீமையான சமூக விளைவுகள் போன்ற அனைத்துப் பிரச்சினைகளுக்கும் விடை காண நாம் இக்கல்விச் சீர்திருத்தத்தின் மூலம் முயற்சிக்கின்றோம்.

கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் கல்வியைப் பற்றிப் பெருமளவில் பேசியபோதிலும் கல்வித்துறை சார்ந்த பிரச்சினைகளை இனங்கண்டபோதிலும் அவர்கள் முன்னெடுத்து வந்த அரசியல் கலாசாரத்தினால் கல்வித்துறையில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன.

பெரும்பாலும் அவர்கள் கல்வியையும் தமது அரசியல் தீர்மானங்களைச் செயற்படுத்துவதற்காகப் பயன்படுத்தினர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் மாத்திரம் "தேசியப் பாடசாலை" எனப் பெயர் பலகையை மாத்திரம் மாற்றிய எத்தனை பாடசாலைகள் இருக்கின்றன? கல்வியின் தரத்திற்கு எத்தகைய நிலைமை ஏற்பட்டபோதிலும் தமது பெயரால் கட்டடத்தைத் திறந்துவைப்பது போன்ற கண்காட்சி அரசியலுக்காகத் தமது அதிகாரத்தைப் பயன்படுத்திய இந்த அரசியல்வாதிகள் தமது அரசியலுக்காகக் கல்வியைப் பயன்படுத்தி அத்துறைக்குப் பெரும் அழிவை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அதேபோன்று, கடந்தகால அரசாங்கங்கள் வரவு - செலவுத் திட்டத்தில் கல்விக்கான ஒதுக்கீட்டைப் படிப்படியாகக் குறைத்து, கல்வியின் சுமையைப் பெற்றோர் மீது சுமத்தின. கல்வித்துறைக்கு மிகவும் முக்கியமான அம்சமாக விளங்கும் ஆசிரியர் உள்ளிட்ட கல்வித்துறை நிர்வாக சேவையில் கடமையாற்ற வேண்டியவர்களின் தொழில்சார் வளர்ச்சியை ஏற்படுத்தி மனித வளத்தை மேம்படுத்துவதற்குப் பதிலாக அந்த மனித வளத்திற்குப் பாதகங்களை விளைவிக்கும் துறைகளை வளர்ச்சி அடையச் செய்தார்கள்.

கல்விச் சீர்திருத்தம் பற்றி கடந்த அரசாங்கங்கள் கலந்துரையாடியிருந்தபோதிலும் அவ்வாறு கலந்துரையாடுகின்ற அதேவேளை, கல்வி முறைமையை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான மனிதவளங்கள், அடிப்படை வசதிகள், முதலீடுகள் கல்வித்துறைக்கு ஒதுக்கப்படவில்லை என்பதும் தெரியவருகிறது.

அவ்வாறு மறுசீரமைப்புக்குத் தேவையான ஒதுக்கீடுகளை மேற்கொள்ளாவிட்டால் இத்தகைய கல்விச் சீர்திருத்தங்களில் தீர்க்கமான மாற்றத்தை ஏற்படுத்துவது கடினமாகும்.

ஆயினும் நாம் மிக நேர்த்தியாகத் திட்டமிட்டு சமூகத்தினுள் இதைப் பற்றிய ஒரு கலந்துரையாடலை ஏற்படுத்தி, தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, சமூகத்தில் ஏற்பட வேண்டிய கருத்து மாற்றம் உள்ளிட்ட அனைத்து விடயங்களைப் பற்றியும் கவனம் செலுத்தி, இக்கலந்துரையாடல்களில் அவற்றை உள்வாங்கி உண்மையான ஒரு சமூக மாற்றத்திற்குத் தேவையான மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

அந்த வகையில் கல்வி ரீதியாக முன்னேற்றமடைந்த ஒரு நாடாக எமது நாட்டை அபிவிருத்தி அடையச் செய்வதற்கும் அதனுள் ஒழுக்கமான ஒரு சமூகத்தை ஏற்படுத்துவதற்கும், உலக நாடுகளுடன் தோளோடு தோள் நிற்கக்கூடிய பொருளாதார அபிவிருத்தியடைந்த ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் நாம் முன்னெடுத்துச் செல்லும் இந்தச் சமூகக் கலந்துரையாடல்களின் செய்தியைப் பரப்ப முன்வாருங்கள் என்றும் பிரதமர் அழைப்பு விடுத்தார்.

(ந-7)

# நிலந்த ஜெயவர்தன தொடர்பான அறிக்கையைக் கோரிய சட்டமாதிபர்

அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளரும் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருமான நிலந்த ஜெயவர்தன தொடர்பான விசாரணை அறிக்கையை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடமிருந்து கோருவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

விசாரணை அறிக்கையை முழுமையாக மீளாய்வு செய்த பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் சட்டமாதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்த போதிலும் அதனைத் தடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமை தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அவருக்கு எதிரான நடவடிக்கைகளை உள்ளடக்கிய சில பரிந்துரைகளை முன்வைத்திருந்தது.

அதற்கமைய முன்னெடுக்கப்பட்ட ஒழுக்காற்று விசாரணையில் அனைத்துக் குற்றச்சாட்டுகளிலும் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டமையால் நிலந்த ஜெயவர்தன சேவையில் இருந்து நீக்கப்பட்டதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் லலித் ஏக்கநாயக்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ந-7)



கறுப்பு ஜூலை நினைவுக் கருத்தரங்கு "நேற்று - இன்று- நாளை" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் வை.எம்.சீ.ஏ மண்டபத்தில் நேற்று (27) இடம்பெற்றது.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி முதல் ஒருவார காலம் இலங்கையில் இடம்பெற்ற படுகொலைத் தாக்குதல்களில் பலியான உறவுகளின் நினைவாக குறித்த கருத்தரங்கு இடம்பெற்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா தலைமையில் நடைபெற்ற இந்தப் பகிரங்க அரசியல் கருத்தரங்கில்,

பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சட்டத்தரணி ப.குகனேஸ்வரன், சமூக அரசியல் செயற்பாட்டாளர் சி.சிவமோகன் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ந-7)

# நெல்லியடியில் ...





கறுப்பு ஜூலை நினைவேந்தலை முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 07 மணியளவில் நெல்லியடி மத்திய பேருந்து நிலையம் முன்பாக தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த போராட்டத்தில் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் , உள்ளூராட்சி சபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ந-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அச்சமின்றி வாருங்கள் உச்சம் தொடவைப்போம் நாட்டை

## அமைச்சர் விஜித ஹேரத் அழைப்பு



**(கொழும்பு) .... இலங்கையில் தற்போது முதலீடுக்கு உகந்த சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. அதேபோன்று எமது முதலீட்டு சபை இந்த வருடம் பாரியளவிலான முதலீட்டாளர்களை அழைத்து வந்துள்ளது. எனவே அச்சமின்றி எமது நாட்டிற்கு வந்து முதலீடு செய்யுமாறு முதலீட்டாளர்களுக்கு நாம் பகிரங்க அழைப்பு விடுக்கிறோம் என வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

இலங்கை வர்த்தக கவுன்ஸிலின் உலகளாவிய சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

எமது நாட்டை சர்வதேச நாடுகளுக்கு முன்பாக அழகானதும் வளமான நாடாகவும் மாற்ற வேண்டும். இந்த சவாலை வெற்றிக்கொள்ள அரசினால் மாத்திரம் முடியாது. இதற்கு வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமாகும். நாம் அனைவரும் இணைந்தே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும்.

இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள இங்குள்ள வர்த்தகர்கள் தயாராக இருக்கிறார்கள். மேலும் கடந்த காலங்களில் முதலீட்டாளர்களை பாதுகாப்பதற்காக நாம் பல தீர்மானங்களை எடுத்தோம். குறுகிய காலப்பகுதிக்குள் அச்சமின்றி இலங்கைக்குள் முதலீடு செய்வதற்கான வாய்ப்பை உருவாக்கி கொடுத்துள்ளோம்.

குறிப்பாக எமது முதலீட்டுச் சபை இந்த வருடம் பாரிய ளவிலான முதலீட்டாளர்களை அழைத்து வந்துள்ளது. கடந்த 6 மாதங்களில் 500 மில்லியன் ரூபா பெறுமதியான முதலீடுகளுக்கு அனுமதி வழங்கியுள்ளோம். அதேபோன்று வடமாகாணத்தில் காங்கேசன்துறை பரந்தன் உள்ளிட்ட 3 முதலீட்டு வலயங்களை புதிதாக ஆரம்பித்துள்ளோம்.

எனவே முதலீட்டாளர்களுக்கு இங்கு வந்து முதலீடு செய்யுமாறு நாம் அழைப்பு விடுக்கிறோம். தற்போது சுற்றுலா அபிவிருத்தி வலயத்தின் ஊடாக 3 ஆயிரம் ஏக்கர் காணிகள் திறக்கப்பட்டுள்ளன. உலகமெங்கிலும் உள்ள இலங்கையருக்கு இந்த செய்தியை கூறுகின்றோம்.

பல வருடங்களாக அந்நாடுகளில் பில்லியன், ரில்லியன் கணக்கிலும் நிதியை ஈட்டி வர்த்தகம் செய்து கொண்டிருப்பவர்களுக்கு தற்போது தாய் நாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது எனவே அச்சமின்றி எமது நாட்டிற்கு வந்து முதலீடு செய்யுமாறு முதலீட்டாளர்களுக்கு நாம் அழைப்பு விடுக்கிறோம் என்றார் அவர். (க-8)

# காசோலை மோசடி; வருகிறது புதிய சட்டம்

(கொழும்பு)

வங்கிகளில் போதுமான நிதி இல்லாமல், காசோலைகளை விநியோகிக்கும் நபர்களுக்கு அபராதம் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கான சிறைத்தண்டனை வழங்கப்படும் வகையில் சட்டத்திருத்தம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பான சட்டத் திருத்தம் விரைவில் பாராளுமன்றில் முன்வைக்கப்படவுள்ளதாக ஆங்கில செய்தித்தாள் ஒன்று தெரிவித்துள்ளது.

போதுமான நிதி இல்லாமல் காசோலைகளை வழங்குவோரும், மூடிய கணக்கிலிருந்து காசோலைகளை வழங்குவோரும் இந்த சட்டத்தின்படி தண்டனைக்குட்படுத்தப்படுவார்கள்.


வங்கிகளுக்கு நிதிப்பாதுகாப்பை வழங்கும் வகையில் மேற்கொள்ளப்படவுள்ள இந்த திருத்தங்களின் கீழ், விதிக்கப்படும் அபராதம், வங்கியில் உரிய நிதியின்றி திரும்பிய காசோலைக்குச் சமமான தொகையாக இருக்கும் என்று முன்மொழியப்பட்டுள்ளது.

இந்தநிலையில் காசோலையை வழங்கிய ஒருவர், காசோலையைப் பெற்றவரின் கோரிக்கையின் கீழ் 90 நாட்களுக்குள் பணத்தைச் செலுத்தாது போனால் இந்த திருத்தத்தின்கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அச் செய்தியிடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-8)

# மாலைதீவு செல்கிறார் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான மூவர் அடங்கிய குழு இன்று மாலைதீவுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளது.



இந்த விஜயத்தின் போது, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, மாலைதீவு ஜனாதிபதி முய்சுவுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாகவும், பரஸ்பர ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் நோக்கில் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கிடையில் முறையான இராஜதந்திர உறவுகள் நிறுவப்பட்டு இந்த ஆண்டுடன் 60 ஆவது ஆண்டு நிறைவு கொண்டாடப்படவுள்ளது. அந்த வகையில் இலங்கையின் உயர்மட்ட தூதுக்குழுவின் இந்த அரசுப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (க-8)

# ஓலை அர்ச்சனைத் தட்டு பிளாஸ்ரிக்குக்கு வெட்டு

## வலி.தென்மேற்கு பிரதேச சபை குட்டு

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட ஆலயங்களில் பயன்படுத்தப்படும் அர்ச்சனைத் தட்டுக்கள் பிளாஸ்ரிக்குகளைத் தவிர்த்து ஓலையினால் நெய்யப்பட்டதாக இருக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபை அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை தவிசாளர் ஜெசீதன் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், ஆலயங்களில் விழாக் காலங்களில் பிளாஸ்ரிக்கினால் ஆன அர்ச்சனைப் பெட்டிகள் விநியோகிக்கப்படுகின்றன.

இவற்றினால் சூழலுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்படுகின்றது. இதற்கு மாற்றீடாக ஓலையினால் நெய்யப்பட்ட அர்ச்சனைத் தட்டுக்களை விநியோகிப்பதனூடாக சூழலுக்கு பாதிப்பில்லாத மற்றும் குடிசைக் கைத்தொழிலும் வளர்ச்சி அடையும் என தவிசாளரினால் சுட்டிக் காட்டப்பட்டது. இதனையடுத்து குறித்த விடயம் வலி.தென் மேற்குப் பிரதேச சபையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. (க-8)



# கிளி.மரக்கறி சந்தை கட்டடத் தொகுதி திருத்த வேலைகளுக்கு நிதி ஒதுக்கீடு

## தவிசாளர் வேழமாலிகிதன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மரக்கறிச் சந்தைக் கட்டடத் தொகுதி கடைகளின் கதவுகளை சீர்படுத்தும் பணி 5 மில்லியன் நிதி ஒதுக்குதலுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மரக்கறிச் சந்தை கட்டடத் தொகுதியின் சுருக்குக் கதவுகள் பழுதடைந்து பாவிக்க முடியாத நிலையில் மிகவும் ஆபத்து நிறைந்ததாகக் காணப்படுவதைச் சுட்டிக் காட்டிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இச் சந்தைக் கட்டடத் தொகுதி கதவு நிர்மாணப் பணிகளை மேற் கொள்வதற்கு 5 மில்லியன் ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றை திருத்துவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வருவதாகவும் இவ் விடயம் தொடர்பில் கரைச்சிப் பிரதேச சபை விரைந்து செயற்படும் என்றும் சுட்டிக்காட்டினார். (க-3-271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண குத்துச்சண்டை போட்டியில் சம்பியனாகியது முல்லை.பெண்கள் அணி



2025 ஆம் ஆண்டுக்கான வடமாகாண விளையாட்டுப் போட்டியின் குத்துச்சண்டை போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் அணியினர் முதலாம் இடம் பெற்று பெருமை சேர்த்துள்ளனர்.

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தால் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியில் நடத்தப்பட்ட குத்துச்சண்டை போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட பெண் கள் அணியினர் 7 தங்கம் 6 வெள்ளி பதக்கங்களைப் பெற்று முதலாம் இடத்தை தமதாக்கி முல்லை மண்ணிற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

குறித்த போட்டியில் இரண்டாம் இடத்தை வவுனியா மாவட்டமும், மூன்றாம் இடத்தை கிளிநொச்சியும், பெற்றுக்கொண்டது.

அத்துடன் ஆண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தை வவுனியாவும், இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணமும், மூன்றாம் இடத்தை முல்லைத் தீவு மாவட்டமும் பெற்றுகொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (3-299)

# ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடர் செப்டெம்பர் மாதம் ஆரம்பம்



2025ஆம் ஆண்டுக்கான ஆடவர் ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை நடைபெறும் என ஆசிய கிரிக்கெட் பேரவை அறிவித்துள்ளது.

பங்களாதேஷின் டாக்காவில் நடைபெற்ற ஆசிய கிரிக்கெட் பேரவையின் கூட்டத்தில் இது தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த தொடரை ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கை, இந்தியா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பாகிஸ்தான், ஐக்கிய அரபு இராச்சியம், ஹொங்கொங் மற்றும் ஓமான் ஆகிய அணிகள் இந்தத் தொடரில் பங்கேற்கவுள்ளது.

குறித்த தொடரானது இருபதுக்கு 20 வடிவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# டெஸ்ட் தொடரில் அதிக ஓட்டங்கள்
## சச்சின் சாதனையை நெருங்கும் ஜோ ரூட்



சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்களின் பட்டியலில் இங்கிலாந்தின் ஜோ ரூட் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து இடையிலான நான்காவது டெஸ்ட் போட்டியில் ஜோ ரூட் 38 ஆவது சதத்தைப் பதிவு செய்தார்.

இதனை அடுத்து டெஸ்ட் கிரிக்கெட்டில் சில மைல்கல் சாதனைகளை ஜோ ரூட் நிலைநாட்டினார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது மொத்த எண்ணிக்கையை 13,409 ஓட்டங்களாக உயர்த்தியதன் மூலம் சச்சின் டெண்டுல்காரின் 15,921 ஓட்டங்களுக்கு அடுத்ததாக அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் வரிசையில் இரண்டாம் இடத்தை அடைந்துள்ளார்.

இந்தியாவின் ராகுல் ட்ராவிட் (13,288), தென் ஆபிரிக்காவின் யக்ஸ் கல்லிஸ் (13,289), அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொன்டிங் (13,378) ஆகியோரை பின்தள்ளியே ஜோ ரூட் இரண்டாம் இடத்தை அடைந்தார்.

அத்துடன் 38ஆவது சதத்தைக் குவித்ததன் மூலம் சச்சின் டெண்டுல்கார் (51 சதங்கள்), யக்ஸ் கல்லிஸ் (45), ரிக்கி பொன்டிங் (41) ஆகியோருக்கு அடுத்ததாக குமார் சங்கக்காரவுடன் (38) 5ஆம் இடத்தை ஜோ ரூட் பகிர்ந்துகொண்டுள்ளார்.

சர்வதேச டெஸ்ட் கிரிக்கட் வரலாற்றில் அதிக ஓட்டங்களை எடுத்த வீரர்கள் பட்டியலில் சச்சின் டெண் டுல்கரின் சாதனையை இங்கிலாந்தின் ஜோ ரூட் முறியடிப்பார் என்று விமர்சகர்கள் தெரிவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (3)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1993 RC<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L, Supervisor<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15868 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>2 இல் செவ்<br>கிபா:37 3/4<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BE,MSc,Data Analyst<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, சைவபோசனம்<br>தொ.இ: G/15846 |
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>2 இல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்-Degree, Assistant Dental Doctor (Denmark)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15870 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்-ரோகினி<br>கி-பா-48<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: IT, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15847 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:மூலம்<br>கி.பா:47<br>உயரம்: 5"<br>தகைமை/தொழில்:Labourer<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15871 | பிறப்பு-1988-இந்து<br>நட்சத்திரம்-உத்தரம்<br>உயரம்-5"<br>கி.பா: 56<br>தகைமை/தொழில்: பட்டதாரி. Work (கனடா)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15848 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா:64 1/2<br>1 இல் செவ்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்:A/L, Shop<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15873 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>கி.பா -24: 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்-Civil Engineer (London)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு(PR உள்ளவர்)<br>தொ.இ: G/15849 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா:16 1/2<br>1 இல் செவ்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L,Shop (own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15874 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்:பூரம்<br>1இல் செவ்<br>கி.பா-50<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் -BSc, Private work<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்.<br>தொ.இ: G/15850 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுசக்தி திட்டத்தை முன்னெடுக்க ஐந்து தளங்கள் அடையாளம்

(கொழும்பு)

அணுசக்தி திட்டத்தை மேம்படுத்தும் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, முதல் அணுமின் நிலையத்தை அமைப்பதற்கான ஐந்து சாத்தியமான தளங்களை இலங்கை அடையாளம் கண்டுள்ளதாக சர்வதேச அணுசக்தி முகவரகம் உறுதிப்படுத்தியுள்ளது. கடந்த 4 முதல் 18 ஆம் திகதி வரை நடைபெற்ற மீளாய்வுப் பணிக்கு பிறகு இந்தத் தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒருங்கிணைந்த அணு உள்கட்டமைப்பு மீளாய்வு பணிக்குழு, 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் கட்ட சர்வதேச அணுசக்தி முகவரகத்தின் மீளாய்வுகளில் வழங்கப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்துவதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை மதிப்பிட்டது.

அணுசக்தி உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளதாக சர்வதேச அணுசக்தி முகவரகம் குறிப்பிட்டது. குறிப்பாக, உலை கொள்முதல் செய்வதற்கான ஒரு மேலாண்மை கட்டமைப்பை இலங்கை நிறுவியதுடன், விரிவான அணுசக்தி சட்ட வரைவையும் உருவாக்கியுள்ளது. மேலும் 2025 - 2044 ஆம் ஆண்டுக்கான தேசிய நீண்டகால எரிசக்தி திட்டத்தில் அணுசக்தியைச் சேர்த்துமுள்ளது.

இலங்கையின் அணுசக்தி முயற்சி முதன்முதலில் 2010 ஆம் ஆண்டில் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் அணு சக்தித் திட்ட அமலாக்க அமைப்பு உருவாக்கப்பட்டது. இத் திட்டத்தில் எரிசக்தி அமைச்சு, இலங்கை அணுசக்தி அதிகாரச் சபை, இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை அணுசக்தி ஒழுங்குமுறை மன்றம் ஆகியவை அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# சிறுவர்களுக்கான நீதியில் சமத்துவம் பிரதிபலிக்க வேண்டும்

## இலங்கைக்கான ஐரோப்பிய தூதுவர்



(கொழும்பு)

சிறுவர்களுக்கான நீதியில் நேர்மையும் சமத்துவமும் பிரதிபலிக்க வேண்டும் என்றும், சட்ட வாக்கக் கட்டமைப்புக்கள் மறுசீரமைக்கப்பட்டு பலப்படுத்த வேண்டுமெனவும் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதர் கார்மென் மொரெனோ வலியுறுத்தினார்.

இலங்கையில் இடம்பெறுகின்ற சிறுவர்களுக்கெதிரான அனைத்து வகையான வன்முறைகளையும் எதிர்த்துப் போராடுவதற்கு தேவையான அழுத்தங்களை வழங்கும் நோக்கில் சர்வதேச சிறுவர் பாதுகாப்பு மாநாடு கடந்த 25 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

இந்நிலையில் இம் மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சட்டவாக்கக் கட்டமைப்புக்களை பலப்படுத்தி சிறுவர்களுடன் கடமையாற்றும் நிறுவனங்கள் மற்றும் தொழில் வல்லுநர்களின் ஆற்றலை மேம்படுத்தி சிறுவர் நேய நீதித்துறை மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

அத்துடன், சிறுவர்களுக்கான நீதியில் நேர்மையும் சமத்துவமும் பிரதிபலிக்க வேண்டும், அவர்களின் வயது மற்றும் பால்நிலைத் தேவைகளை கருத்திற்கொண்டு அவர்களைப் பராமரிப்பதோடு, அவர்களின் கண்ணியமும் எதிர்கால வளர்ச்சியும் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும்வலியுறுத்தினார். (க-8)

# பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் நியமனம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் புதிய ஊடகப்பணிப்பாளர் மற்றும் பேச்சாளராக பிரிகேடியர் பிராங்கிளின் ஜோசப் உத்தியோக பூர்வமாக கடமைகளை ஏற்றுக்கொண்டுள்ளார்.

அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் மற்றும் பேச்சாளராகப் பணியாற்றிய கேர்ணல் நளின் ஹேரத் அப் பதவியிலிருந்து விடைபெற்றுள்ள நிலையிலேயே அவ்வெற்றிடத்துக்கு பிரிகேடியர் பிராங்கிளின் ஜோசப் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை இராணுவ பொறியியலாளர் படையணியின் மூத்த அதிகாரியான பிரிகேடியர் பிராங்கிளின் ஜோசப் தொழில்முறை, தலைமைத்துவம் மற்றும் தேசிய பாதுகாப்பிற்காக பணியாற்றியுள்ளார். இவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னதாக, இலங்கை பொறியியலாளர் படையணியின் தளபதியாக செயற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (க-8)


# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை தெல்லிப்பளை உப அலுவலகம்

உரிமையாளர் பெயர் :-**கிருஸ்ணஐயர் வாகீஸ்வரி**
விண்ணப்பதாரர் பெயர் :- கிருஸ்ணஐயர் வாகீஸ்வரி
முகவரி :- மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில். மாவிட்டபுரம்

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 02, கே.கே.எஸ் பொன்னாலை பருத்தித்துறை வீதியில் இவ்வாதனம் அமைந்துள்ளது. குறித்த ஆதனமானது 24.01.2025 ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிஸ் திரு.சிவலிங்கம் இளங்கீரன் அவர்கள் முகதாவில் இலக்கம் 17541 இல் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதியால் இவ்வாதனம் விண்ணப்பதாரியை வந்தடைந்தது.

மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியிலுள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் V.தவராஜா அவர்களால் அளந்து வரைந்த 1006 ஆம் இலக்க 24.04.2016 ஆம் திகதிய நில அளவைப்படத்தில் துண்டு -1 ஆக காட்டப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, தெல்லிப்பளை கோவிற்பற்று கீரிமலை இறை "மாதகல் குருவில்" நிலப்பரப்பு இரண்டும் குளி ஆறு தசம் ஒன்பது (நில.பர 2 குளி 6.9) வீடும் இது தெல்லிப்பளை (J/226) கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ளது. இதன் எல்லைகள்
கிழக்கு - ஜோண் தேவகுமார் வில்சனின் ஆதனம்.
வடக்கு - சபாரட்ணம் குருக்கள் பாலகிருஸ்ணக்குருக்களின் ஆதனம்
மேற்கு - சுப்பிரமணியசர்மா பெண் பத்மாவதியின் ஆதனம்.
தெற்கு - K.K.S வீதி

மேற்குறித்த ஆதனத்தை **கிருஸ்ணஐயர் வாகீஸ்வரி** என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் மேற்படி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்,தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(4905)


# இராசிபலன்

28.07.2025
ஆடி 12 , திங்கட்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 1.16 மணிவரை

பூரம் முன்னிரவு 8.02 மணிவரை
சுபநேரம் 12.02 - 1.32 மணிவரை
இராகுகாலம் 7.32 - 9.02 மணிவரை
ஆடிப்பூரம், நாக சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்
திருவோணம்,அவிட்டம்.

வளவன்




தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோரின் ஆதரவால் பெருமைகள் வந்து சேரலாம்.




பயணங்களால் பலனுண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.




எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.




உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.




பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், அரசு வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.




தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள் சயனசுகக் குறைவான நாள்.




எதிர்பார்த்த காரியமொன்று இன்று நடைபெறும் வாய்ப்புண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகளில் முன்னேற்றமுண்டு.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.




இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்,பேச்சில் கனிவு பிறக்கும், பொருள் வரவிற்கு அடித்தளம் அமைப்பீர்கள்.




திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்.




கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, உடல்ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம்.




வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

நமது யோசனையை கேட்காத போது சொல்லாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்டைதீவு கல்வி வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்ட மாணவர் கௌரவிப்பும் பரிசில் வழங்கல் நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை மண்டைதீவு மகா வித்தியாலய மண்டபத்தில் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் கலாநிதி செ.சேதுராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக லண்டன் நோத் வெஸ்ட் யுனிவேர்சிற்றி கொஸ்பிற்றல் வைத்திய நிபுணர் செல்வலிங்கம் தெய்வகுமார் கலந்து சிறப்பித்திருந்தார். இதன்போது உயர்தரம், சாதாரண தரம் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் மூவர் பேராசிரியர்களாக பதவி உயர்வு



பேராசிரியர்
ஏ.முருகானந்தன்



பேராசிரியர்
எஸ்.குமரன்



பேராசிரியர்
எஸ்.கோபிசங்கர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவப் பீட சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

மருத்துவ பீடத்தின் ஒட்டுண்ணியல் துறை, சத்திர சிகிச்சையியல் துறை மற்றும் சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை ஆகிய துறைகளைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூன்று பேரைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று முன்தினம் சனிக்கிழமை ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய, திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த ஒட்டுண்ணியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ. முருகானந்தன், சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி எஸ். குமரன் மற்றும் சத்திரசிகிச்சையியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். கோபிசங்கர் ஆகியாரின் விண்ணப்ப மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் என்பன இன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், கலாநிதி ஏ. முருகானந்தன் ஒட்டுண்ணியலில் பேராசிரியராகவும், கலாநிதி எஸ். குமரன் குடும்ப மருத்துவத்தில் பேராசிரியராகவும், கலாநிதி எஸ். கோபிசங்கர் சத்திர சிகிச்சையியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (3-33)



புனித பத்திரிசியார் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு ஞாபகார்த்த முத்திரை வெளியீடு கல்லூரி பிரதி அதிபர் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் நடைபெற்றது. (படம்:சிவசாந்தன்)

# நிருத்திய சங்கீத கலைக்கூடத்தின் சிவமயம் நிகழ்வு நாளை

(முல்லைத்தீவு)

நிருத்திய சங்கீத கலைக் கூடம் (ஐக்கிய இராச்சியம்) நடத்தும் சிவமயம்-2025 நிகழ்வானது நாளை செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்கு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இலண்டன் நிருத்திய சங்கீத கலைக்கூட நிறுவுனர் திருமதி. ஸ்ரீமதி ராதிகா ராஜலோகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் இ.நிசாந்தன், கௌரவ விருந்தினராக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அ.உமாமகேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (3-281)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 250 | 250 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 400 | 300 | 350 |
| தக்காளி | 200 | 250 | 130 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 280 |
| கோவா | 400 | 400 | 250 | 350 |
| கரட் | 400 | 450 | 350 | 400 |
| பூசணி | 140 | 120 | 100 | 100 |
| புடோல் | 100 | 150 | 100 | 120 |
| வாழைக்காய் | 120 | 120 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 150-300 | 350 | 350 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 120 | 150 |
| பாகற்காய் | 400 | 450 | 500 | 450 |
| வெண்டக்காய் | 100 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 250 | 250 | 280 | 400 |
| பயற்றங்காய் | 450 | 300 | 300 | 300 |
| லீக்ஸ் | 300 | 350 | 250 | 300 |
| பீற்றூட் | 100 | 250 | 140 | 200 |
| கறிமிளகாய் | 600 | 500 | 550 | 600 |
| முருங்கைக்காய் | 450 | 500 | 350 | 600 |
| போஞ்சி | 550 | 500 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 150 | 250 | -- | 250 |
| கீரை – 1 பிடி | 80-150 | 150 | 100 | 150 |
| தேசிக்காய் | 100 | 200 | 180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 150 | 80-140 | 140-180 |
| இராசவள்ளி | 700 | 500 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 500 | 250 | 400 |
| முள்ளங்கி | 120 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 60 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 70 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 100 | 80 | 200 |



மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா பல பக்த அடியவர்கள் புடைசூழ வெகுசிறப்பாக அண்மையில் இடம்பெற்றது. (படம்:மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக திருக்கூட்டத்தொடர் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ.து.ஜெகதீஸ் வரக்குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வேதாந்த மடம், ஸ்ரீ சிவகுருநாத பீட 3 ஆவது குருபீடாதிபதி ஸ்ரீ வேத வித்தியாசாகரர் சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க வாழ்த்துரையினை தெல்லிப்பளை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்கவுள்ளார்.

குறித்த நிகழ்வின் பிரதம விருந்தினராக நல்லூர், பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார், சிறப்பு விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் ம.நிரேஷ்குமார், கௌரவ விருந்தினர்களாக நல்லூர் யா/மங்கையர்க்கரசி வித்தியாலய அதிபர் ஆ.பாலச்சந்திரன், நல்லூர் சங்கிலியன் மன்றத் தலைவர் இ.சந்திரகுமார் மற்றும் சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் சு.சத்தியேந்திரன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (3)

# ஒரு இலட்சத்து 45 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வருகை

(கொழும்பு)

ஜூலை மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 1 இலட்சத்து 45 ஆயிரத்து 188 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகள் தெரிவிக்கின்றன.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகளின்படி, இந்தியாவில் இருந்து அதிகளவாக 27 ஆயிரத்து 786 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய இராச்சியத்திலிருந்து 16 ஆயிரத்து 750 பேரும், நெதர்லாந்திலிருந்து 10 ஆயிரத்து 809 பேரும், சீனாவிலிருந்து 5 ஆயிரத்து 904 பேரும் மற்றும் பிரான்ஸில் இருந்து 7 ஆயிரத்து 732 பேரும் சுற்றுலாப் பயணிகளாக நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். (8)

# ஆடை ஏற்றுமதி அதிகரிப்பு

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டு இலங்கையின் ஆடை ஏற்றுமதி 5.2 சதவீதம் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளதாகக் கூட்டு ஆடை சங்கங்களின் மன்றம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய இராச்சிய சந்தைகளில் ஏற்பட்ட வலுவான இலாபம் காரணமாக இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், பிரித்தானியாவுக்கான இலங்கையின் ஏற்றுமதி 20.4 சதவீதம் அதிகரித்துள்ளது.

இதற்கமைய, 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மொத்த ஆடை ஏற்றுமதி 8.95 சதவீதம் அதிகரித்துள்ளதாகக் கூட்டு ஆடை சங்கங்களின் மன்றம் தெரிவித்துள்ளது. (க-8)

# இலங்கையர் ஒருவர் தமிழ்நாட்டில் கைது

தமிழ்நாடு சென்னை - செங்குன்றம் பகுதியில் சட்டவிரோதமாக தங்கியிருந்ததாக கூறப்படும் இலங்கையர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, குறித்த பகுதியில் பொலிஸார் சோதனை நடத்தியுள்ளனர்.

அதன்போது, உரிய ஆவணங்களின்றி இந்தியாவுக்குள் குறித்த நபர் சட்டவிரோதமாக பிரவேசித்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அவரை கைது செய்த பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

# தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

# கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக கடமை புரியும் திரு.கிறகோரி சந்திரசேகரன் ஆகிய எனக்கு கையளிக்கப்பட்ட 2021.07.01 ஆம் திகதிய 2234/39 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி மூலமாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக மேற்படி சங்கத்தின் 19 கிளைகளுக்குமான அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

**கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்**

கிளைப்பொதுக்கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும் **2025.08.03 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி**

| இல | கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | 1 | கொடிகாமம் | திரு. அருளானந்தம் தயாளன் | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை |
| 2 | 2 | கச்சாய் பாலாவி | திரு. வல்லிபுரம் நிதர்சன் | யா/கச்சாய் அ.த.க பாடசாலை |
| 3 | 3 | வினோபா | திரு. இராஜசிவம் தனுசன் | கச்சாய் கிராம முன்னேற்ற சங்க மண்டபம் |
| 4 | 4 | அல்லாரை | திரு. தங்கராசா கண்ணதாசன் | யா/அல்லாரை அ.த.க பாடசாலை |
| 5 | 5 | மந்துவில் மத்தி | திரு. பாக்கியராசா குருபரன் | யா/மந்துவில் றோமன் க.த.க பாடசாலை |
| 6 | 6 | மந்துவில் | திரு. கணேஸ் சுரேஸ்பாபா | யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம் |
| 7 | 7 | இயற்றாலை | திரு. சிங்கராசா சியாந்தன் | யா/இயற்றலை அமெரிக்கன் மி.த.க பாடசாலை |
| 8 | 8 | வடவரணி | திரு. நாகமுத்து ஜெயவதனன் | யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம் |
| 9 | 9 | இடைக்குறிச்சி | திரு. கனகரட்ணம் திசாகரன் | யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் |
| 10 | 10 | நாவற்காடு | திரு. சிவசிதம்பரம் சிறீதரன் | நாவற்காடு கிளை மண்டபம் |
| 11 | 11 | நவஜீவனம் | திரு. வடிவேல் கிருஷாந் | யா/மிருசுவில் றோமன் க.த.க பாடசாலை |
| 12 | 12 | வடக்குமிருசுவில் | திரு. சற்குணசிங்கம் பிறேமிலன் | யா/மிருசுவில் அ.த.க பாடசாலை |
| 13 | 13 | விடத்தற்பளை | திரு. பொன்னம்பலம் கோகுலன் | யா/விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம் |
| 14 | 14 | எழுதுமட்டுவாழ் | திரு. சோமசுந்தரம் தங்கேஸ்வரன் | யா/ எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயம் |
| 15 | 15 | நாவற்காடு | திரு. பாலச்சந்திரன் பாலரவி | யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம் |
| 16 | 16 | கரம்பைக்குறிச்சி | திரு. கந்தசாமி சசிகரன் | கரம்பைக்குறிச்சி பொது மண்டபம் (திக்கில் கந்தசுவாமி ஆலயத்திற்கு அருகில்) |
| 17 | 17 | கெற்பேலி | திரு. விநாசித்தம்பி சிவபாலன் | கெற்பேலி வீரபுத்திரர் சனசமூக நிலையம் |
| 18 | 18 | தவசிகுளம் | திரு. சந்திரலிங்கம் சுவர்ணன் | யா/போக்கட்டி றோமன் க.த.க பாடசாலை |
| 19 | 19 | உசன் | திரு. அமிர்தானந்தசிவம் சஞ்சயன் | யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் |

- அதற்கு அமைய இக் கூட்டங்களிற்கு வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது
- கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர், அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களை தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையை கோருவார். இதில் இருவர் 18-35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளர்களுக்கு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்தப்படுவதுடன் சங்கச்செயலாளருக்கும், எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,**
**இல.857, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**திரு.கி.சந்திரசேகரன்**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

## கிளைக்குழு உறுப்பினராக தெரிவு செய்யப்படத் தகுதியற்றவர்கள்

- கிளையினது பட்டியலில் பெயர் காணப்படாத ஒருவர்.
- 18 வயதிற்கு கீழ்ப்பட்டவர்கள்.
- உடன் முன்சென்ற 3 ஆண்டுகளுக்கு தீய ஒழுக்க செயலுக்காக குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டவர்.
- கடனை தீர்க்க வகையற்றவர் எனப்பிரகடனம் செய்யப்பட்டவர் அல்லது அவ்வாறு ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டவர்.
- இச்சங்கத்திற்கு அல்லது பதிவு செய்யப்பட்ட வேறு எக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் எக்கடனையாவது திருப்பிக்கொடுக்காதவர் அல்லது வேறு எந்த விதத்திலும் தவறு செய்தவர்.
- இச் சங்கத்தின் வியாபாரி என பதிவு செய்யப்பட்டவர் அல்லது சங்கத்தின் நிலவுரிமைகளுக்கு முரண்பட்ட வகையில் ஒரு வியாபாரத்தை நடாத்துபவர்.
- சங்கத்தின் ஆதாயங்கருதி ஏதாவது ஒரு பதவியை அல்லது இடத்தினை வகிப்பவர் அல்லது ஆணையாளரின் முன்னனுமதியின்றி ஏதாவது தகைமைக்கொடையை பெறுபவர்.
- இச் சங்கத்தில் அல்லது இச்சங்கம் உறுப்புரிமை வகிக்கும் வேறு எந்த சங்கத்திலும் ஊதியம் பெறும் ஊழியராயிருப்பவர்.
- ஓர் உறுப்பினர் என்ற முறையில் தவிர மற்றப்படி சங்கத்துடன் செயற்பட்டிருக்கும் எந்த ஒப்பந்தத்திலோ அல்லது சங்கத்தினால் செய்யப்படும் எந்த விற்பனையிலோ கொள்வனவிலோ அல்லது சங்கத்தின் நிதியோடு சம்பந்தப்பட்ட அல்லது செய்யப்படவிருக்கும் அல்லது பேச்சளவிலிருக்கும் ஏதாவது ஒப்பந்தத்தில் அல்லது கொடுக்கல் வாங்கல்களில் மறைமுகமாகவோ நேர்முகமாகவோ அக்கறை கொண்டிருப்பவர்.
- கூட்டுறவுச்சட்டத்தின் படி இயற்றப்பட்ட விதிகளுக்கமைய தமது பதவியை அல்லது வேலையை கடந்த 5 ஆண்டுகளில் விட்டகல வேண்டிய நிலைக்கு ஆளானவர்.
- இயக்குனர் சபையால் அல்லது கிளை நிர்வாக சபையால் உறுப்பினராகக் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாத அல்லது மேன்முறையீடு இயக்குனர் சபையினால் அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 6 (2) இந்த கீழ் ஆணையாளரால் மீளாய்வு மூலம் அல்லது இவ்விதியின் 2.4 அல்லது 2.6 இன் கீழ் வாக்காளர் அட்டவணையில் பெயர் சேர்க்கப்படாத ஒருவர்.
- பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள்.
- அங்கத்தவராக சேர்ந்து 100/=வை பங்குப்பணமாக செலுத்தி முடிக்காதவரும், அங்கத்தவராக சேர்ந்து ஒரு வருடம் பூர்த்தியாகாதவருமான ஒருவர்.

**(சங்கத்தின் துணைவிதிப்பிரிவு 22(1))**

(சி-3512)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்


# தோண்டத் தோண்ட எலும்புக்

# பார்க்கப் பார்க்க நொருங்குது இதயக்

## செம்மணிக்கு நீதி கோரி சென்னை அதிர்

(டில்லி)

**"இந்திய அரசே குரல் கொடு ஈழத்தில் நடந்த இனப்படுகொலைக்கு குரல் கொடு, சர்வதேசமே நீதியை வழங்க மறுக்காதே, இனியும் மௌனம் காக்காதே" போன்ற உணர்வுமிகு கோசங்களால் சென்னை மாநகரமே அதிர்ந்தது.**



செம்மணிப் படுகொலைக்கு நீதி வழங்க வேண்டும். சர்வதேச விசாரணைக்கு இந்திய மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக்கோரி மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று சென்னையில் நேற்று நடைபெற்றுள்ளது.

நாம் தமிழர் கட்சியின் தலைவரும் ஈழத்தமிழருக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருபவரும் செந்தமிழன் சீமானின் தலைமையிலேயே மேற்குறித்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஈழத்தமிழினத்துக்கு நீதி கோரிய மேற்குறித்த போராட்டத்தில் ஆயிரக் கணக்கான ஈழ ஆதரவாளர்கள் கலந்து கொண்டு செம்மணிப் புதைகுழிக்கு நீதி கோரி நின்றனர்.

குறித்த போராட்டத்தில் செம்மணி புதைக்குழிக்கு நீதி வேண்டும், செம்மணி எங்கும் தமிழர் குருதி உள்ளது, சிங்களவர் செய்த அநீதிக்கு நீதி வேண்டும், தோண்டத் தோண்ட எலும்பு கூடு பார்க்க பார்க்க நொருங்குது இதயக் கூடு, இன்னும் எத்தனை சாட்சி வேண்டும், இனப்படுகொலை என அறிவிக்க வேண்டும், ஐநா உரிமை ஆணையமே, நீதி வழங்க மறுக்காதே இனியும் மௌனம் காக்காதே, இந்திய அரசே மத்திய அரசே குரல் கொடு குரல் ...ரனை ... அரசே ... கொடு... க்கு ... உண... ணதிர... த்தக்க...

## இந்திராகாந்தியின் சாதனையை முறியடித்து இரண்டாவது இடத்திற்கு முன்னேறினார் மோடி

(டில்லி)


இந்திய பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவின் இரண்டாவது நீண்ட காலம் பிரதமராகப் பதவி வகித்தவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

2014 முதல் 25.07.2025 வரை தொடர்ந்து 4,079 நாட்கள் இந்தியாவின் பிரதமராகப் பதவி வகித்து வருகிறார்.

அறிக்கைகளின் படி, இதற்கு முன்பு மிக நீண்ட காலம் பிரதமராகப் பதவி வகித்தவராக இந்திரா காந்தி விளங்கினார்.

1966 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி முதல் 1977 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் திகதி வரை இந்திரா காந்தி தொடர்ச்சியாக பிரதமராகப் பதவி வகித்திருந்தார்.

இந்திரா காந்தி 4,077 நாட்கள் பிரதமராகப் பதவி வகித்த நிலையில் மோடி இன்றுடன் 4,079 நாட்கள் பிரதமராக பதவி வகித்து அவரின் சாதனையை முறியடித்துள்ளார்



இதேபோல், 1947 முதல் 1964 வரை பதவி வகித்த முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு வரலாற்றில் மிக நீண்ட காலம் பதவி வகித்த முதலாவது இந்திய பிரதமர் என்று கூறப்படுகிறது. (அ-த)


## அமெரிக்க விமானம்

## அருந்தப்பில் உயிர்தப்பிய ப

(வோஷிங்டன்)

அமெரிக்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான போயிங் விமானம் 173 பயணிகளுட்பட 179 பேருடன் டென்வர் விமான நிலையத்தில் இருந்து மியாமிக்கு செல்ல இருந்த நிலையில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஒடுபாதையில் இருந்து விமானம் புறப்பட தயாரான போது, சக்கரத்தில் தீப்பற்றிக் கொண்டது. இதனால் அச்சமடைந்த பயணிகள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.



அவசரகால சறுக்குகளைப் பயன்படுத்தி 173 பயணிகளும் ஆறு பணியாளர்களும் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர் என விமான நிலைய அதிகாரிகள் உறுதி செய்தனர்.

விமானம் புறப்படும் போது லேண்டிங் கியர் செயலிழந்து தீ பற்றிக் ... காரண... தாகவ... னர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# புக்கூடு ..........தயக்கூடு

## அதிர்ந்தது



றங்குது ...தனை ...காலை ..., ஐநா ...நீதி ...னியும் ...இந்திய ...கொடு

குரல் கொடு பன்னாட்டு விசாரணைக்கு குரல் கொடு, தமிழக அரசே தமிழக அரசே அழுத்தம் கொடு பன்னாட்டு விசாரணைக்கு அழுத்தம் கொடு" என்ற உணர்வுமிகு வாசகங்கள் விண்ணதிரச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# ...னம் விபத்து

## ...ப்பிய பயணிகள்



...ாரிகள் ...போது ...ந்து தீ

பற்றிக் கொண்டதாகவும் இதற்கான காரணங்கள் ஆய்வு செய்யப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (க-8)

# தாய்லாந்து-கம்போடியா போர் நிறுத்தத்திற்குத் தயார்

## நோபல் பரிசை உறுதிப்படுத்தினார் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

தாய்லாந்து, கம்போடியா உடனடியாக போர் நிறுத்த பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக்கொண்டன என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்ற முதல்நாளில் இருந்தே, தன்னை தானே பெருமைப் படுத்தி பேசுவதை வழக்கமாக கொண்டுள்ளார். எந்த இரு நாடுகளுக்கு இடையே போர் நடந்தாலும், நான் தான் முடிவுக்கு கொண்டு வந்தேன் என்று கூறுவது வழக்கம்.

இஸ்ரேல்- ஈரான் மற்றும் இந்தியா-பாகிஸ்தான் போரை நிறுத்தியதாக ட்ரம்ப் பல முறை கூறியுள்ளார்.

தற்போது, தாய்லாந்து-கம்போடியா இடையே நடந்து வரும் போரை முடிவுக்கு கொண்டு வர தான் முயற்சி செய்து வருவதாக ட்ரம்ப் கூறி உள்ளார். இது குறித்து,டொனால்ட் ட்ரம்ப் கூறியதாவது, எல்லை மோதல்களுக்குப் பிறகு தாய்லாந்தும் கம்போடியாவும் உடனடி போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகளை நடத்த ஒப்புக்கொண்டுள்ளன.

இரு தரப்பினரும் அமைதியை நாடுகின்றனர். அதே நேரத்தில் சர்வதேச அமைப்புகள் நீண்டகால தீர்வுக்கு அழுத்தம் கொடுக்கின்றன.

ஸ்கொட்லாந்தில், கம்போடிய பிரதமர் ஹன் மானெட் மற்றும் தாய்லாந்தின் தற்காலிக பிரதமர் பும்தம் வெச்சாயாச்சாயுடன் தனித்தனியாகப் பேசியுள்ளேன்.

தொடர்ந்து போரிடுவது அமெரிக்காவின் சாத்தியமான வர்த்தக ஒப்பந்தங்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்றும் இரு தலைவர்களையும் எச் சரித்தேன் என அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தனக்கு அமைதிக்கான நோபல் பரிசை வழங்க வேண்டும் என பல இடங்களில் தெரிவித்திருக்கும் நிலையில் தற்போது தாய்லாந்து, கம்போடியா எல்லைப் போரில் மூக்கை நுழைத்திருக்கிறார்.

நான்கு நாட்களாக நீடித்த தாய்லாந்து- கம்போடியா எல்லை மோதல்களில் இதுவரை 30 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு உள்ளனர். 1,30,000 இற்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# காசா குழந்தைகளுக்கு கருணை; பிரிட்டன் பிரதமர் உறுதி



(லண்டன்)

அவசரமருத்துவ உதவி தேவைப்படும் சிறுவர்களை காசாவிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை பிரிட்டன் முன்னெடுக்கும் என தெரிவித்துள்ள அந்த நாட்டின் பிரதமர் கெய்ர் ஸ்டாமெர் காசாவிற்குள் மனிதாபிமான உதவிகளை பிரிட்டன் வான்வழியாக செய்யவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் ஜனாதிபதி ஜேர்மன் சான்சிலர் ஆகியோருடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் போது இதனை தெரிவித்துள்ள அவர் அவசரகிசிச்சை தேவைப்படும் சிறுவர்களை காசாவிலிருந்து அகற்றுவது மனிதாபிமான உதவிகளை காசாவிற்குள் மேற்கொள்வது போன்றவற்றை ஜேர்தானுடன் இணைந்து முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள பிரிட்டிஸ் பிரதமர் இஸ்ரேல் காசாவில் ஏற்படுத்தியுள்ள பட்டினி நிலை பயங்கரமானதாக காணப்படுகின்றது என தெரிவித்துள்ளதுடன் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களை அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கையை பிரிட்டன் முன்னெடுக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (க-8)

# 9 பேரைப் பலி எடுத்த பஸ் விபத்து

(ஹனாய்)

வியட்நாமில் இடம்பெற்ற பஸ் விபத்தில் சிக்கி குழந்தைகள் உள்ளிட்ட 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

வியட்நாமில் ஹனோயிலிருந்து டானாங்கிற்கு பஸ் சென்று கொண்டிருந்த போது இந்த பஸ் திடீரென வீதியை விட்டு விலகி போக்குவரத்து அடையாள பலகைகளில் மோதி கவிழ்ந்து விபத்திற்குள்ளானது.


இந்த விபத்தில் குழந்தைகள் உள்ளிட்ட 9 பேர் உயிரிழந்துள்ளதுடன் 16 பேர் படுகாயமடைந்துள்ளனர். (க-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கடலில்

## காற்றின் வேகம் அதிகரிக்கும்



(கொழும்பு)

மாத்தறை முதல் ஹம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலும், கற்பிட்டி முதல் மன்னார், காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை முதல் வாகரை வரையிலான கடற்கரையோரக் கடல் பகுதிகளில், காற்றின் வேகம் மணிக்கு 50-55 கி.மீ வரை அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன் மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மாகாணங்களுடன் காலி, மாத்தறை மாவட்டங்களில் இன்று பல தடவைகள் மழை பெய்யும் எனவும்

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகள் மற்றும் புத்தளம், திருகோணமலை, ஹம்பாந்தோட்டை உள்ளிட்ட பகுதிகளில் மணிக்கு 50 கி.மீ வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும் புத்தளம் முதல் மாத்தறை வரை கடற்கரைப் பகுதிகளில் மழை பெய்யக்கூடும் என்றும், கடல் பகுதிகளில் 30-40 கி.மீ வேகத்தில் காற்று வீசும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இப்பகுதிகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் என்பதால், கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மீனவர்கள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (க-8)

# அன்று கவிழ்ந்த கப்பலின் தாக்கம் இன்றும் இருந்துகொண்டிருக்கிறது

கேரள மாநிலம் கொச்சி கடற்கரையில், சரக்குக் கப்பல் ஒன்று மூழ்கி இரண்டு மாதங்களுக்குப் பின்னரும் அதன் தாக்கம் இலங்கையின் மேற்கு கடற்கரையில் உணரப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது..

இதன்படி கப்பலில் இருந்து வெளியேற்றப்பட்ட பிளாஸ்ரிக் துகள்கள் மற்றும் ஏனைய கழிவுகள் இலங்கையின் கடற்கரைகளில் ஒதுங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது தெஹிவளை மற்றும் வெள்ளவத்தை கடற்கரைகளிலும் குறித்த கழிவுகள் காணப்படுகின்றன.

எனினும் அவற்றை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று பொதுமக்கள் முறையிட்டுள்ளனர்.

இந்தநிலையில், தன்னார்வலர்கள் தெஹிவளை கடற்கரையில், குறித்த கழிவுகளைச் சுத்தம் செய்யும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனராயினும் இவற்றை முழுமையாக அப்புறம்படுத்தும் திட்டத்தை அரசு மேற்கொள்ள வேண்டும் என கோரியுள்ளனர். (க-8)

# இருவேறு குற்றச்செயல்களில் மூன்று பேர் கைது



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இருவேறு குற்றச் செயல்களுடன் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கை நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அதன்படி கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாற்றுப் பகுதியில் இருந்து அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிப் பயணித்த இரண்டு டிப்பர் வாகனங்களும் அதன் சாரதிகள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் விசாரணையின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் புதுக்குடியிருப்பில் இருந்து கிளிநொச்சி நோக்கி சட்டவிரோதமான முறையில் பெறுமதி மிக்க மரக்குற்றிகளை எடுத்துச் செல்லப்பட்ட கப்ரக வாகனத்தையும் அதன் சாரதியையும் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டு குறித்த சந்தேக நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (க-8)

# இன்று ஒரு தகவல் 419

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## செரியாமை

"வைத்தியரிடம் போகாமல் வாழ்வதற்கு வழி ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்!"

இப்படி ஒரு பெரியவரைப் பார்த்துக் கேட்டார் ஒருவர். அதற்கு அந்தப் பெரியவர் சுலபமான ஒரு வழியைச் சொன்னார். அது என்ன வழி என்றால்

பசி எடுப்பதற்கு பிறகு கொண்டு போக வேண்டும். கையை வாய்க்கு

பசி அடங்குவதற்கு முன்னாடியே கையை வாயை விட்டு எடுத்துவிட வேண்டும்.

இப்படி செய்யறவன் நோய்வாய்ப்பட மாட்டான் என்பது அந்தப் பெரியவரோட அறிவுரை ! இதற்கு என்ன அர்த்தம்?

பசிப்பதற்கு முன்னாடியே சாப்பிடக்கூடாது. பசி முழுதாக அடங்கும் வரைக்கும் சாப்பிட்டுக்கொண்டே இருக்கக்கூடாது. வயிறு முட்ட பசி எடுத்து அதற்கு பின் அளவாக சாப்பிடுபவனுக்கு நோய் நொடி வருவதில்லை!

செரிமானக்கோளாறு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படிப் பார்த்துகொண்டாலே பலவிதமான நோய்களிலேயிருந்து நாம் தப்பித்து விடலாம். அஜீரணம் ஏன் வருகிறது? உடம்பிலே கோளாறு இருந்தாலும் இது வரும்.

மனதிலே கோளாறு இருந்தாலும் இது வரும். காலம்தவறி சாப்பிடுவது காரம், புளிப்பு, அதிகமாக இருக்கின்ற ஆகாரங்களைச் சாப்பிடுவது வெறும் வயிற்றிலே மது அருந்துவது இதனாலே எல்லாம் அஜீரணம் ஏற்படும். அதே மாதிரி.

அளவுக்கு மீறிய சோகம், வருத்தம், மன உளைச்சல் இதனாலேயும் அஜீரணம் ஏற்படும்.

சிலசமயம் வேறு நோய்களுக்காக சாப்பிடும் மருந்து மாத்திரைகூட வயிற்றுக் கோளாறை உண்டாக்கிவிடும். அடிக்கடி தேநீர் அருந்துவது. புகைப்பிடிப்பது இது எல்லாம் அஜீரணத்தை இன்னும் அதிகமாக்கி விட்டு விடும். சரியாக தூங்கவில்லை என்றாலும் சரி. சரியாக உடற்பயிற்சி செய்யவில்லை என்றாலும் சரி, இந்தக் கோளாறு வரும்.

ஆக அஜீரணம் ஏற்பட பல காரணங்கள் உண்டு. அதனாலே காரணத்தைக் கண்டுபிடித்து அதை சரி செய்யவேண்டும். இதெல்லாம் இருக்கட்டும்! செரிமானக் கோளாறு வராமல் இருப்பதற்கு நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

இதற்கு சுலபமாக ஒரு நாலைந்து வழியை நிபுணர்கள் சொல்கிறார்கள். அது என்ன தெரியுமா?

ஒரே நேரத்திலே வயிறு முட்ட சாப்பிடாதீர்கள்.

வயிறு நிரம்புவதற்கு முன்னாடியே சாப்பிடுவதை நிறுத்திவிட வேண்டும்.

ஒவ்வொரு சாப்பாட்டுக்கும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை வையுங்கள். அந்தந்த நேரத்திலே ஒழுங்காக சாப்பிட்டுவிட வேண்டும். சாப்பாட்டுக்குப் பிறகு குறைந்தது பதினைந்து நிமிடங்களாவது ஓய்வு எடுக்கவேண்டும்.

சாப்பிடும் போது அவசரமாகவோ பதற்றமாகவோ இருக்கக் கூடாது! நிதானமாக சாப்பிட வேண்டும். சாப்பிட்டுக் கொண்டு இருக்கும்போது நம் மனது மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். அமைதியாக இருக்க வேண்டும். இப்படி சாப்பிடுவதற்கு நம்மை நாமே பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

எண்ணெயிலே பொரித்தது, வறுத்தது போன்ற ஆகாரங்களை முடிந்தவரைக்கும் வேண்டாம் என்று சொல்லிவிடுங்கள்.

சிலபேருக்கு வயிற்றிலே அமிலத்தன்மை அதிகமாக இருக்கும். வயிற்றுப் புண்ணுக்கான அறிகுறி இருக்கும்.

இப்படிப்பட்டவர்கள் எல்லாம் வயிற்றை காலியாக இருக்கவிடக் கூடாது. இப்படி இந்த ஒரு சில வழிகளைக் கடைப்பிடித்தாலே உங்கள் வயிறு உங்களுக்குத் தொந்தரவே தும் கொடுக்காது!

"உடம்பு வெயிட் குறைவதற்கு என்ன வழி?" என்று ஒருவர் டாக்டரிடம் யோசனை கேட்டார்.

"வேண்டாம்!" என்ற வார்த்தையை தினம் மூன்று தடவை சொன்னால் வெயிட் குறைந்து விடும்!" என்றார் அவர்.

"அது எப்படி?" என்றார் இவர்.

"உங்கள் மனைவி காலை மதியம் இரவு மூன்று வேளையும் சாப்பிட வாருங்கள்? என்று கூப்பிடும் போது எல்லாம் நீங்கள் இந்த வார்த்தையை சொல்ல வேண்டும்.!" என்றார் டாக்டர்.

"சரி" என்று சொல்லிவிட்டுப் போனார் அவர்.

கொண்டுவந்து ஒரு வாரம் கழித்து அவரை ஆஸ்பத்திரியிலே சேர்த்தார்கள். உடம்பு வற்றிப் போய் விட்டது. குளுகோஸ் ஏற்றுவது போல ஆகிவிட்டது! "என்ன உடம்பு இவ்வளவு மோசமாகி விட்டது ?" என்று கேட்டார் டாக்டர்.

"அட போங்கள் டாக்டர். உங்கள் பேச்சைக் கேட்டுப் போய் வீட்டிலே சாப்பிடக்கூப்பிடும் போது எல்லாம் வேண்டாம் வேண்டாம் என்று சொல்ல ஆரம்பித்தேன். அதன் பின் சாப்பிடக் கூப்பிடுவதையே நிறுத்தி விட்டாள்! இப்ப நான் ஆகாரத்தை கண்ணாலே பார்த்தே ஆறு நாளாச்சு டாக்டர்!" என்றார் பரிதாபமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய இரதோற்சவம் அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் சென்.ஜோன் அம்புலன்ஸ் படையணியினா் உயிர் காக்கும் முதலுதவிப் பணியினை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த செயற்றிட்டம் சென்.ஜோன் அம்புலன்ஸ் படையணியின் யாழ்.மாவட்ட ஆணையாளர் எட்வாட் டிலிஷான் அவர்களின் வழி காட்டுதலில் சென்.ஜோன் அம்புலன்ஸ் படையணியின் யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர் சே.ஈழநேசன் தலைமையில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பசுவின் சீம்பால் / கடும்புப்பால்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பசுவின் கன்று ஈன்றவுடன் முதலில் கிடைக்கக்கூடிய அமிர்தம் போன்ற மருத்துவப் பண்புகள் நிறைந்த அந்தக் காலத்தில் நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய Anti-biotic தன்மை. நிறைந்த பாலாகும். சில ஆய்வுகள் Natural Anti-biotic medicine என்று சீம்பாலை எடுத்து இயம்புகின்றது.


எப்படி ஒரு தாய்ப்பால் சக்தி குழந்தைக்கு கிடைக்கின்றதோ அதேபோல் இக் கடும்புப் பால் சாப்பிடும் போது குழந்தைகளில் இருந்து முதியோர் வரை நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்கிறது.

அதாவது தைமஸ் சுரப்பியை தூண்டி எமது நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த போதும் செயலாற்ற தூண்டும். அதேபோல் Hyper Immunity ஏற்பட்டாலும் அதாவது Auto Immune நோய்களான சோறியாஸிஸ், சிறிய மூட்டுக்களில் ஏற்படும் மூட்டுவியாதி போன்ற நிலைமைகளுக்கு எதிராக தொழிற்படும் ஆற்றல் உண்டு.

மேலும் வைரஸ், பங்கசுக்களுக்கு எதிராக தொழிற்படும் ஆற்றல் இப் பசுவின் சீம்பாலிலுள்ள சத்துக்களில் காணப்படுகிறது.

இதனை பசுவின் Colostrum என அழைக்கப்படுகிறது. பசுக்கன்று ஈன்று 3 நாட்களுக்கு சீம்பால் கிடைக்கும். சீம்பால் குழந்தைகட்கு எளிதில் ஜீரணிக்கக்கூடிய முதல் உணவு . சீம்பாலில் அனைத்து ஊட்டச் சத்துக்களும் உள்ளது. சீம்பாலில் கண்பார்வைக்கு தேவையானதும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும் உயிர்சத்து A காணப்படுகிறது. சீம்பாலே குழந்தைகட்குரிய முதல் தடுப்பு மருந்தாகும். வயதானவர்கள் சீம்பால் அதிகம் பருகினால் முகத்தில் சுருக்கங்கள் கோடுகள் மறையும். இளமையான தோற்றத்தை கொடுக்கும். அதிகமாக சாப்பிட்டால் உடல் செயல் திறனுக்கு துணையாக இருக்கும். பசுவின் பாலைப் போல் சீம்பால் தண்ணியாக இருக்கமாட்டாது. தடிப்பாகவும், மஞ்சள் நிறமாகவும் காணப்படும். அது நாட்டு பசுவின் சீம்பால் மிகவும் ஆரோக்கியமானது. இவ்





சீம்பாலில் கொழுப்புச் சத்து குறைவாகவும், புரதச் சத்து அதிகமாகவும் காணப்படும். உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றும் ஆற்றலும் உண்டு. சீம்பாலை கறந்து ஒரு மண் சட்டியில் வைத்து மிதமான சூட்டில் கிளறிவர பால் முறிந்து திரிதிரியாக வரும். இடைவிடாமல் கிண்டி, சர்க்கரை, ஏலம் சிறிது சுவைக்காக சேர்த்து சாப்பிட உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் சீம்பாலில் உள்ள அரிய புரதங்கள், விற்றமின்கள் மற்றும் தாதுக்கள் காரணமாக மனித உடலின் வயதாகும் தன்மை குறைந்து உடலின் இளமைத் தன்மையை நீண்ட காலம் தக்க வைக்கின்றது.

என்பதை மருத்துவ ஆய்வு அறிக்கைகளும் தெரிவிக்கின்றன.

இத்தகைய அற்புதச் சுவையும் மருத்துவ குணங்களும், நோய் எதிர்ப்பு சக்தியும் கொண்ட இவ் பசுவின் சீம்பாலை இன்றைய தலைமுறை அறிந்திருக்க வாய்ப்பில்லை. இதன் பலன்களை கண்ட மேலை நாட்டினர் இதையும் வணிகப்படுத்திவிட்டனர்.

இவற்றை பல்வேறு அளவுகளில் , பாக்கட்டுகளில் மற்றும் டப்பாக்களில் அடைந்து விற்கின்றனர்.

நம் கிராமங்களில் அல்லது சிறு நகரங்களில் வீடுகளில் பசுக்களை வளர்த்து பால் வியாபாரம் செய்வோர் கூட இவற்றை விற்காமல் விட்டுவிடுகிறார்கள். சீம்பால் ஆனது பசு கன்று ஈன்றபின்பு பசு சுரக்கும் புரதம் நிறைந்த பால். சீம்பாலில் உள்ள இமியூனோ குளோபுலின்கள் உடலில் நோய்த் தொற்றுக்களுடன் போராட உதவுகின்றன. பொதுவாக நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ள குழந்தைகட்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். சீம்பாலிலுள்ள வளர்ச்சிக் காரணிகள் திசுக்களை சரி செய்யவும், தசைகள் மற்றும் என்புகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் உதவுகின்றன. சீம்பாலிலுள்ள ஊட்டச் சத்துக்கள் செரிமான அமைப்பை மேம்படுத்த உதவுகின்றது. அதிலுள்ள கல்சியம், பொஸ்பரஸ் போன்ற சத்துக்கள் தாதுக்கள், என்புகளின் வளர்ச்சியை அதிகரிக்கின்றன. மற்றும் வயிற்றுப் போக்கு, மற்றும் காய்ச்சல் போன்ற நோய்களின் தீவிரத்தைக் குறைக்கலாம். உடலை வலுப்படுத்தும் மூட்டு வலியை போக்க உதவும். அதை சாப்பிடுவதால் மஞ்சட் காமாலை நோய் ஏற்படாமல் தடுக்கலாம்.

சீம்பாலில் அதிகளவு Immunoglobulins, Antimicrobial peptides பண்புகள் இருப்பதால் இதனை இயற்கை நுண்ணுயிர் கொல்லி மருந்தாக கருதலாம். சீம்பால் வெள்ளை அணுக்கள் நிறைந்து இருப்பதால் நோய் எதிர்ப்பு சக்தியை உடலில் அதிகரிக்கச் செய்கிறது. அதனை விட சீம்பாலில் உயிர்ச்சத்து B2, B12,E,D போன்றனவும் கல்சியம், செம்பு, இரும்பு, நாகம், மகனீசியம், மகனீசு, பொஸ்பரஸ் சத்துக்களும் அதிகமாக காணப்படுகின்றது.

சீம்பாலை நாட்பட்ட மலச்சிக்கல் உள்ளவர்கள் எடுக்கும் போது நல்ல மலமிளக்கியாக தொழிற்படும்.

தற்போது பசுக்களுக்கு ஊசி மருந்துகள் மாஸ் போன்ற செயற்கை முறைகளில் வளர்க்காமல் இயற்கையாக பராமரித்து வளர்க்கும் பசுக்களின் சீம்பால் அற்புதமான நோய் எதிர்ப்பு உணவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 831





நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். பழுவூர் இளையராணியைச் சில தினங்களுக்கு முன்னாலேதான் இதே கோடிக்கரையில் பார்த்தேன். முகத்தோற்றத்தின் ஒற்றுமை உடனே எனக்குத் தெரிந்து போய்விட்டது."

"காரணம் என்னவாயிருக்கும்?" "அதையுந்தான் ஒரு நாள் கண்டுபிடிக்கப் போகிறேன்.

இன்றைக்கு அத்தையைப் பார்த்ததும் அதைப்பற்றிக் கேட்கலாமென்றிருக்கிறேன்." அத்தைதான் ஊமையாயிற்றே? எப்படி அவளுடன் பேசுவாய்?" நீ உன் தாயாரோடு பேசுவதில்லையா? அமுதா!"

"ஜாடையினால் பேசுவேன் பிறந்தது முதல் பழக்கம். அப்படியும் புதிய விடயம் ஒன்றைப் பற்றிச் சொல்வதாகயிருந்தால் கஷ்டம்தான்!"

"பெரிய அத்தையும் நானும் அப்படித்தான் ஜாடையினால் பேசிக் கொள்வோம். ஜாடையினால் பேச முடியாததைச் சித்திரம் எழுதிக் காட்டிக் கொள்வோம்."

"ஒரே குடும்பத்தில் அக்கா, தங்கை இருவரும் ஊமையாகப் பிறந்தது எவ்வளவு கஷ்டமான விஷயம்? அவர்களைப் பெற்றவர்களுக்கு அதனால் எவ்வளவு துன்பமாயிருந்திருக்கும்?"

"அது மட்டுமல்ல சிறு வயதில் அக்காவும், தங்கையும் ஓயாமல் சண்டை போட்டுக் கொள்வார்களாம். அதனால்தான் பாட்டனார் பெரிய அத்தையை மட்டும் அழைத்துக் கொண்டு போய் பூதத் தீவில் குடியேறி வசித்து வந்தாராம். பெரிய அத்தையின் பேரில் தாத்தாவுக்கு ரொம்ப ஆசையாம். குழந்தை பிறந்தவுடன் இராணியாகும் யோகம் இருக்கிறது என்று யாரோ ஜோசியன் ஒருவன் சொன்னானாம். அதனால் குழந்தை ஊமை என்று தெரிந்ததும் அவருடைய மன வேதனை ரொம்ப அதிகமாயிருந்ததாம்"

இப்படிப் பேசிக் கொண்டே அவர்கள் காட்டில் புகுந்தார்கள். வெகு நேரம் அலைந்தும் ஊமை ராணியைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

"அமுதா! நீ என்னுடனிருப்பதனால்தான் அத்தையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. உன்னைக் கண்டு வேண்டுமென்றே மறைந்து கொள்கிறாள்." "என் அதிர்ஷ்டம் அவ்வளவுதான் நான் நினைத்தது எதுவும் நடைபெறுவதில்லை நான் போகட்டுமா?"

"எப்படிப் போவாய்? இந்தக் காட்டிலிருந்து உன்னை நான் தான் வெளியிலே கொண்டு போய் விட வேண்டும்."

இந்தச் சமயத்தில் ஓர் அதிசயமான குரல் ஒலி காட்டுக்குள்ளேயிருந்து வந்தது, அது மனிதக் குரலாகவும் தோன்றவில்லை மிருகங்களின் குரலாகவும் தோன்றவில்லை.

இரண்டு மூன்று தடவை அந்த ஒலி கேட்டது. ஒலி வந்த திசையை நோக்கிச் சில மான்கள் பாய்ந்து ஓடின. பூங்குழலி சற்று நின்று யோசித்தாள்.

(தொடரும்...)

தெளிவாகத் தெரியவில்லை. மேகத்திரை போட்டு மறைத்தது போலிருக்கிறது." "பழுவூர் இளைய ராணியை நீ அடிக்கடி பார்த்ததுண்டா?"

"சில சமயம் பார்த்ததுண்டு ஆமாம்! நீ சொன்ன பிறகு யாருடைய முக ஜாடை என்று தெரிகிறது. நந்தினி தேவியின் முகத்தோற்றமே தான்! ஆச்சரியமா இருக்கிறதே! அது எப்படி ஏற்பட்டிருக்கும். பூங்குழலி! நீ எப்படி அந்த ஒற்றுமையை கண்டுபிடித்தாய்?"

"அத்தையை அடிக்கடி



# சிறுவர் அரங்கம்

## காடுகளைப் பாதுகாப்போம்



(நேற்றைய தொடர்ச்சி)

இது இப்படி இருக்க நரியார் சிங்கத்திடம் சென்று சாது விலங்குகள் யாவும் உம்மை ஒழிப்பதற்கு முயற்சிகள் செய்து கொண்டுள்ளன என்று கூறியது. சிங்கத்திற்கு ஒன்றும் புரியவில்லை, நான் என்ன தவறு செய்தேன்? என்று கேட்க நரியார் அவைகளின் இனங்கள், காட்டில் குறைந்து வருவதால் அவைகள் உங்களை சந்தேகப்படுகின்றன. சொன்னவுடன் சிங்கம் சற்று யோசித்து, இதற்கு நான் சீக்கிரம் தீர்வு காண்கிறேன் என்று மனதுக்குள் முடிவு செய்தது.

முதலில் நம் காட்டின் எல்லையைச் சுற்றி வர வேண்டும் என்று முடிவு செய்த சிங்கம் காட்டு எல்லை முழுவதும் சுற்றி வர ஆரம்பித்தது. சுற்றி வரும் பொழுது ஒரு சில இடங்களில் பெரிய பெரிய குழிகள் வெட்டப்பட்டிருப்பதையும் அந்த குழிகளின் அருகில் வரி வரியாய் வண்டித் தடங்களும் இருந்தன. மனித வாடைகளும் தென்பட்டன.

சிங்கத்திற்கு உண்மை புரிய தொடங்கியது.இது மனிதர்களின் வேலை, இது தெரியாமல் என் மீது சந்தேகம் கொண்ட விலங்குகளை நினைத்து சிரித்து கொண்டது. மறு நாள் அனைத்து விலங்குகளையும் வர சொல்லி அவைகளை கூட்டிச்சென்று, அந்த இடங்களைக் கண்பித்தது.

இப்பொழுது என்ன செய்யலாம், மனிதர்களை இப்படியே விட்டால் எல்லா விலங்குகளையும் வேட்டையாடிக் கொண்டே இருப்பார்கள், அதே நேரத்தில் மனிதர்களை நாம் ஒன்றும் செய்ய முடியாது. அவர்கள் நம்மை விட பலசாலிகள், இவ்வாறு பல யோசனைகளுடன் கலந்தாலோசித்துக் கொண்டிருந்தன.

நரியார் மெல்ல முன் வந்து நான் ஒரு யோசனை சொல்கிறேன் என்றது. அனைத்து விலங்குகளும் நரியை பார்க்க, நம்முடைய சிங்கம், புலி, கரடி, இவைகள், காட்டு எல்லையைவிட்டு ஊர் எல்லைக்குள் நுழைய வேண்டும். சாதாரண விலங்குகள் நாம் சென்றோமென்றால், மக்கள் நம்மை அடித்து கொன்று விடுவார்கள், சிங்கம்,புலி, கரடி போன்றவைகளுக்கு மனிதன் பயப்படுவான். மக்கள் காட்டுக்கு வேலி போட வேண்டும் என்று அரசாங்கத்தை வற்புறுத்த ஆரம்பிப்பார்கள், அரசாங்கம் அப்படி செய்ய வரும் போது இந்த கூட்டம் ஓடிப்போகலாம்.

அனைத்து விலங்குகளும் ஆமோதிக்க, மறு நாள் காலையில் ஊர் தெற்கு எல்லையில், நடந்து கொண்டிருந்த பலர் சிங்கத்தை பார்த்து விழுந்தடித்து ஓடினர். அது போல, வடக்கு ஊர் எல்லையில் புலி ஒன்று நின்று கொண்டிருப்பதை பார்த்த மக்கள் பயந்தடித்து ஓட ஆரம்பித்தனர். கிழக்கு எல்லையில் கரடியும், மேற்கு எல்லையில் யானைக்கூட்டமும் மக்களை பயமுறுத்த, மக்கள் அரசாங்கத்தை நோக்கி எங்களுக்கு பாதுகாப்பு கொடுங்கள் என்று கேட்க ஆரம்பித்து விட்டனர்.வன பாதுகாவலர்களும், விலங்குகள் நல ஆர்வலர்களும், மனிதன் காட்டுக்குள் சென்று விலங்குகளை கொல்வதால்தான் இந்த பிரச்சினை வருகிறது என்று அரசாங்கத்திற்கு கடிதம் எழுதினர்.

அரசாங்கம் காட்டு எல்லைகளை வரையறை செய்ய ஆரம்பித்தது. அப்பொழுதுதான் தெரிந்தது, இந்த வேட்டைகாரர் கள் கூட்டம் பெரிய பெரிய குழிகள் வெட்டி விலங்குகளை பிடிப்பதை கண்டு பிடித்தது. உடனே அவரகளை கைது செய்து எல்லைகளுக்கு பாதுகாப்பு போட்டு பலப்படுத்தியது.

இப்பொழுதெல்லாம் மனிதர்களும், விலங்குகளும், அவரவர் எல்லைக்குள் நிம்மதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். (முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணியாத வரை வாழ்க்கை பயம் காட்டும்
துணிந்து பார் வாழ்க்கை வழி காட்டும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நல்லூர் முருகன் எங்கள் இனத்தின் ஆட்சித் தலைவன்

நல்லூர்க் கந்தப் பெருமானின் பெருந்திருவிழா நாளை 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

நல்லூர்க் கந்தனின் மகோற்சவம் தொடங்கிவிட்டால் எங்கும் தெய்வீகம் கமழத் தொடங்கும்.

ஆம், நல்லூர்க் கந்தப் பெருமான் எங்கள் தமிழ் இனத்தின் தலைவன்.

உலகமெல்லாம் மனிதர்களைத் தலைவனாகக் கொண்டாடும்போது, இலங்கைத் தமிழர்கள் மட்டும் நல்லூர்க் கந்தப்பெருமானை தங்களின் ஆட்சித் தலைவனாக – நல்லூர் இராசதானியில் வீற்றிருந்து நம்மை ஆளுகின்ற கடவுளாகப் போற்றி வாழ்வதனால்தான், அவர்கள் அரசியல்வாதிகளின் பின்னால் அணிதிரள்வதில்லை.

ஆம், சமய வேறுபாடின்றி நல்லூர்க் கந்தனை எங்கள் தமிழ்க் கடவுளாக நாம் ஏற்றுள்ளோம்.

அதேவேளை உலகநாடுகளில் இருந்து வருகின்ற வெளிநாட்டவர்கள் நல்லூருக்கு மிகவும் பக்திபூர்வமாக வருகின்றனர்.

நல்லூர்க் கந்தனின் ஆலயத்துக்குச் செல்வதென்பது வெளிநாட்டுப் பயணிகளின் முக்கிய நிகழ்ச்சி நிரலாக உள்ளது.

இதேபோன்று புலம்பெயர்ந்த எம் உறவுகள் தாங்கள் பிறந்த ஊரை, தங்களின் உறவுகளைப் பார்க்காவிட்டாலும் நல்லூர்க் கந்தனை ஒருக்காலேனும் கண்டுவிட வேண்டுமென்பதற்காக நல்லூர்க் கந்தனின் மகோற்சவத்தில் கலந்து கொள்வதற்காக குடும்பத்தோடு வந்து சேர்கிறார்கள்.

ஆம், தாம் பிறந்த நாட்டை மறந்தாலும் அவர்களால் நல்லூர் முருகனை – அவன் அரசாட்சி செய்கின்ற ஆட்சித் தலத்தை – அவனின் அலங்கார வருகையைக் காணாமல் இருக்க முடியவில்லை.

இவ்விதம் நல்லூர்ப் பதியில் இருந்து கொண்டு, ஆயிரக்கணக்கான மைல்களைக் கடந்து வாழுகின்றவர்களையும் ஈர்த்து இங்கு வரவழைத்து நிற்கின்ற நல்லூர்க் கந்தனின் மகோற்சவம் என்பது, ஒரு திருவிழாவோ அன்றி ஒரு நிகழ்வோ அன்றி ஓர் உற்சவமோ அல்ல. மாறாக, அது ஈழத் தமிழர்களின் பண்பாட்டை, விழுமியத்தை, கலைகலாசாரத்தை, தெய்வீகத்தை, தமிழர்களின் ஒட்டுமொத்த வாழ்வியலின் உன்னதத்தை எடுத்தியம்புகின்ற வரலாற்று நிகழ்வாகும்.

எனவே எங்களைப் பற்றிய மற்றவர்களின் மதிப்பு உயர்வாக இருப்பதற்குக் காரணம் நல்லூர்க் கந்தப் பெருமானின் மகோற்சவ காலத்தில் நம்மிடையே எழும் பக்தி வெளிப்பாடாகும்.

ஆம், கந்தனின் மஹோற்சவ காலமாகிய 25 நாட்களும் அங்கப்பிரதட்ணம் செய்கின்ற இளைஞர்கள், அடி அழிக்கின்ற பெண்கள், காவடி எடுக்கின்ற அடியார்கள்.

நடந்தும் கிடந்தும் தவழ்ந்தும் நல்லூரானைக் காணவென அலைஅலையாய் வருகின்ற பக்தர் கூட்டம். ஆம் அந்தத் தெய்வீக நிலையை இயம்புதலுக்கு மனித மொழி ஏதுமில்லை.

ஆகையால் எங்கள் நல்லூர்க் கந்தப் பெருமானின் மகோற்சவ காலத்தில் எங்கள் உயரிய பண்பாட்டை உச்சமாகப் பின்பற்றி, நல்லூர்க் கந்தனின் வளாகத்தைப் புனித பிரதேசமாக அமுல்படுத்தி, எங்கள் தமிழ் இனத்தின் ஆட்சித் தலைவனுக்கு – நாம் அஞ்சாது வாழ்வதற்கு ஆதாரமாய் இருக்கின்ற ஆறுமுகப் பெருமானின் பெருமைக்குப் பெருமை சேர்ப்போமாக.

# யாழ்.மாவட்டத்தில் முறையற்ற கழிவகற்றல் உயிரினங்களுக்கும் பெரும் பாதிப்பு

## பேராசிரியர் கஜபதி எச்சரிக்கை

முறையற்ற கழிவு முகாமைத்துவம் சூழல் தொகுதியின் உயிர்ப்பல்வகைமைக்குப் பாரிய ஆபத்தை ஏற்படுத்தும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக விலங்கியல் துறைப் பேராசிரியர் கணபதி கஜபதி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் புலம்பெயர் பறவைகளான வலசைப் பறவைகள் அரிதாகக் காணப்படுகின்ற சரசாலை குருவிக்காடு, நாகர் கோவில் பகுதி மற்றும் அரியாலைப் பகுதிகள் முறையற்ற கழிவகற்றல் மற்றும் முறையற்ற கழிவு முகாமைத்துவத்தினால் ஆபத்தை எதிர்கொள்ளும் பகுதிகளாகக் காணப்படுகின்றன.

நகரமயமாதல், பொருளாதார வளர்ச்சி வாழ்க்கைத்தர அதிகரிப்பு மற்றும் குடித்தொகை அதிகரிப்பு கழிவகற்றல் செயற்பாட்டிற்கு சவாலாக இருக்கின்ற நிலையில், அதற்கேற்ற முறையான கழிவகற்றல் பொறிமுறைஇன்னும் உருவாக்கப்படவில்லை. மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வீதிகளில் கழிவுகள் வீசப்படுகின்றன, எரியூட்டப்படுகின்றன இவை அனைத்தும் சட்டத்துக்கு முரணான செயற்பாடாகும்.

முறையற்ற கழிவகற்றலினால் சமூகத்தில் வாழுகின்ற உயிரினங்கள் பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றன. சரசாலை, நாகர்கோயில் மற்றும் அரியாலைப் பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகளாகக் காணப்படுகின்ற நிலையிலும் அங்கு உக்க முடியாத கழிவுகள் தொடர்ந்து கொட்டப்படுகின்றன.

கடற்கரை ஓரமாக மற்றும் அடர்ந்த பற்றைகள் உள்ள பிரதேசங்களில் இவ்வாறு கழிவுகள் கொட்டப்படும் போது அவற்றை விலங்குகள் மற்றும் பறவைகள் உணவுக்காகத் தேடிச் செல்கின்றன. அவற்றை உண்ணும் போதும் விலங்குகள் மற்றும் பறவை இனங்கள் ஆபத்தை எதிர்கொள்கின்றன.

அண்மையில் நெடுந்தீவுப் பிரதேசத்தில் குதிரைகள் இறந்து கிடந்தமை தொடர்பில் ஆய்வு செய்தபோது அவற்றின் வயிற்றுக்குள் பொலுத்தீன் பைகள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

சூழலைப் பற்றிய அறிவு இல்லாமல் கழிவகற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் போது மனிதனுக்கு மட்டுமல்ல சூழலில் வாழுகின்ற உயிரினங்களுக்கும் அது ஆபத்தை விளைவிக்கக் கூடியதாக இருக்கும்.

ஒரு சூழலில் வாழ்கின்ற மனிதன் மற்றும் உயிரிகளின் இயல்பான வாழ்க்கைக்கு முறைளயான கழிவகற்றல் பொறிமுறை செயற்படுத்தப்பட வேண்டும். அல்லாவிட்டால் சூழலில் வாழ்கின்ற ஒரு அங்கி அல்லது ஒரு அங்கம் பாதிக்கப்படுமானால் அது ஒட்டுமொத்த சூழலையும் பாதிக்கும் .

ஆகவே யாழ்.மாவட்டத்தில் முறையான கழிவு முகாமைத்துவம் பின்பற்றப்படாத நிலையில் கழிவகற்றல் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுவது எதிர்காலத்தில் பாரிய அனர்த்தத்துக்கு வழிவகுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

## அதிவேக நெடுஞ்சாலையில் வாகன விபத்து; இருவர் பலி

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ் சாலையில் நேற்று ஏற்பட்ட வாகன விபத்தில் இருவர் உயிரிழந்ததுடன், மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர்.

விபத்து அங்குணுகொல பெலஸ்ஸ பகுதியில், அதிவேக நெடுஞ் சாலையின் 175ஆவது கிலோமற்றர் குறியீட்டுக்கு அருகாமையில் இடம்பெற்றது.

வான் ஒன்றின் டயர் திடீரென வெடித்ததால் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவருகின்றது.

சம்பவத்தில் 72 மற்றும் 44 வயதுடைய இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளதாகவும் காயமடைந்த நால்வரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-7)

## அநுரவின் படத்தைப் பயன்படுத்தி ஆடு கடத்தியோர் கைது

ஆளுங்கட்சியின் சின்னம் மற்றும் ஜனாதிபதி அநுரவின் புகைப்படம் பொறிக்கப்பட்ட சிற்றூர்தியில் இறைச்சிக்காக ஆடு ஒன்றினைக் கொண்டு சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிபென்ன மற்றும் பதுரலிய பகுதியைச் சேர்ந்த இருவரே இந்தச் சம்பவம் தொடர்பில் கைதாகியுள்ளனர்.

சந்தேகத்துக்கிடமாகப் பயணித்த சிற்றூர்தியை வழிமறித்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போதே இவ்வாறு இருவரும் குறித்த குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

முன்னதாக, இதே போன்ற குற்றச்செயலுக்காக அவர்கள் குறித்த சிற்றூர்தியைப் பயன்படுத்தி வந்ததாகவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

பொலிஸாரது விசாரணைகளைத் தொடர்ந்து இருவரும் மத்துகம நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## இனப்பிரச்சினைக்கான ஒரே தீர்வு சமஷ்டியே

### அது நாட்டைக் கூறு போடாது- கஜேந்திரகுமார்

(கொழும்பு)

நாட்டைப் பிரிக்குமாறு நாங்கள் கோரவில்லை. வேரூன்றிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வாகத் தமிழர்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய சமஷ்டியையே நாம் கோருகின்றோம் எனப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற அரசியல் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

நாட்டில் உள்ள பாதுகாப்புப் பிரிவுக்கான செலவைக் குறைக்க வேண்டிய நெருக்கடி அரசாங்கத்துக்கு உருவாகக்கூடும்.

இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் பாதுகாப்புப் பிரிவில் உள்ள ஆளணியைக் குறைக்க முடியாது எனவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டார். (ந-7)

## நாட்டின் ஏற்றுமதித் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம்

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் இலங்கையின் ஏற்றுமதித்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி 2025 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மொத்த ஏற்றுமதி வருமானம்6 ஆயிரத்து 933 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளது.

2024 ஆம் ஆண்டின் குறித்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதி வருமானத்தில் 07 சதவீத அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

இதேவேளை 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில் பொருட்கள் மற்றும் சேவைகள் துறைகளின் மொத்த ஏற்றுமதி வருவாய் ஆயிரத்து 386 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 22

சொக்கன்

இவர்களுடைய அவசரத்தைப் புரிந்துகொண்ட கப்பல் கம்பெனிகள் ஒன்றுக்கு நான்கு மடங்காக விலை சொன்னார்கள். யூதர்கள் அசரவில்லை. எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை முதல்ல கப்பலைக் கொடுங்க என்று காசை நீட்டினார்கள்.

இப்படிப் பெரிய சிறிய கப்பல்கள் படகுகள் கள்ளத் தோணிகள் வரை பல வழிகளில் யூதர்கள் பாலஸ்தீனத்துக்குக் கொண்டுவரப்பட்டார்கள். அவர்கள் பிரிட்டிஷ் கண்ணில் பட்டு விடாமல் உள்ளே வருவதற்காக ஏகப்பட்ட தந்திரங்களைத் திட்டமிட்டு நிறைவேற்றியது பழைய மொசாட்.

ஆரம்பததில் அசட்டையாக இருந்த பிரிட்டன் சீக்கிரத்தில் விழித்துக்கொண்டுவிட்டது. பாலஸ்தீனக் கடற்கரை முழுக்க ரோந்துப் பாதுகாப்பைப் பலப்படுத்தினார்கள். சட்டவிரோதமாக எந்தக் கப்பல் தென்பட்டாலும் அப்படியே யூரேன் எடுத்து ஓடிப்போயிடுங்கள் என்று மிரட்டினார்கள்.

பிரிட்டிஷ்காரர்களுடன் ஒப்பிடும்போது மொசாட் ஏஜென்ட்களிடம் பெரிய படைபலமோ ஆயுதங்களே நவீன கருவிகளோ இல்லை ஆனால் அப்போதும் அவர்கள் தங்களுடைய கடமையிலிருந்து தவறவில்லை. எல்லைப் பாதுகாப்பு எவ்வளவு கடுமையாக இருந்தாலும் தொடர்ந்து ஏகப்பட்ட மொசாட் கப்பல்கள் பாலஸ்தீனத்தை நோக்கி வந்துகொண்டுதான்இருந்தன.

இந்தக் கப்பல்களில் இருந்த யூதர்கள் பலர் தங்களுடைய நாட்டில் பணம் சொத்துக்களையெல்லாம் இழந்து உயிரைமட்டும் கையில் பிடித்துக் கொண்டு ஓடி வந்திருந்தார்கள். அவர்களுடைய கடைசி நம்பிக்கை மொசாட் பாலஸ்தீன மண் அங்கே தங்களுக்கு ஒரு நிம்மதியான வாழ்க்கை அமையும் என்கிற எண்ணம்.

இப்படி பரிதாபமான நிலைமையில் பாலஸ்தீனத்துக்கு வந்த யூதர்களை பிரிட்டன் அதட்டி மிரட்டித் துரத்தியது. ஹிட்லரே பரவாயில்லை என்று நினைக்க வைக்கும்படியான முகாம்களில் அடைத்து வைத்தது.

அதைவிடக்கொடுமை பிரிட்டிஷ்காரர்களிடமிருந்து தப்பித்துப் பாலஸ்தீனத்துக்குள் நுழைய வேண்டும் என்கிற பதற்றத்தில் மொசாட் உளவாளிகள் சில ஆபத்தான வழிகளில் கப்பல்களைக் கொண்டு வந்தார்கள். ஒவ்வொரு கப்பலிலும் அதிகபட்ச அளவுக்குமேல் யூதர்கள் பயணம் செய்தார்கள். இதனால் அவ்வப்போது விபத்துகள் நேர்ந்தன. பல நூறு யூதர்கள் கடலில் முழ்கிப் பலியானார்கள்.

இந்தச் சூழ்நிலையில் பிரிட்டன் மட்டும் கொஞ்சம் மனிதாபிமானத் தோடு யோசித்திருந்தால் யூதர்கள் மொசாட் என்கிற ரகசிய உளவு நிறுவனம் கடத்தல் படையை உருவாக்கவேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. ஹிட்லரின் பிடியிலிருந்து தப்பிய ஆயிரக்கணக்கான யூதர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைந்திருக்கும்.

ஆனால் எல்லா பிரிட்டிஷ்காரர்களுக்கும் கல்மனசு இல்லை. அங்கேயும் மொசாட்டுக்கு ஆதரவாக யூதர்கள் தப்பிக்க உதவி செய்த பல நல்ல



உள்ளங்கள் இருந்தன. உளவாளிகள், இராணுவ அதிகாரிகள், காவலர்களுக்குக் கூடக் கருணை மனம் உண்டு என்று நிரூபித்த நெகிழ்சிக் கதைகள் அவை.

## உத்தரவின்றி வெளியே போ

வெளிநாட்டில் கஷ்டப்படுகிற யூதர்களைப் பாலஸ்தீனத்துக்கு அழைத்துவரவேண்டும், அங்கே அவர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துத் தர வேண்டும் என்கிற பழைய மொசாட்டின் நோக்கங்கள் உசத்தியானவைதான் ஆனால் எதார்த்தம்?

ஹிட்லர் என்ன இளிச்சவாயா? இவர்கள் பாட்டுக்கு அவருடைய ராஜ்ஜியத்துக்குப் போய் யூதர்கள் கையைப் பிடித்து வெளியே அழைத்துவந்துவிடமுடியுமா? உள்ளே இருக்கிற யூதர்களுக்கே நித்ய பூஜை போட்டுப் பிரசாதம் கொடுத்துக்கொண்டிருக்கிறவர் இப்படி வெளியிலிருந்து வருகிற விருந்தாளிகளைச் சும்மா விட்டுவைப்பாரா?

சிரமம்தான் ஆனால் ஹிட்லர் ஆட்சியில் எல்லோருக்கும் இதயம் தொலைந்துவிடவில்லை. அங்குள்ள சிலர் கருணை மனிதாபிமானத்தால் உந்தப்பட்டு யூதர்களுக்குத் தங்களால் முடிந்த உதவிகளைச் செய்து கொண்டிருந்தார்கள்.

ஹிண்ட்லர் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஹாலிவுட் வசூல் ராஜா ஸ்டீஃபன் ஸ்பீல்பெர்க் சினிமாவாக எடுத்துப் பிரபலப்படுத்திய அதே ஆஸ்கர்ஷிண்ட்லர் தான்.

ஆஸ்கர் ஷிண்ட்லர் ஜேர்மனியைச் சேர்ந்த தொழிலதிபர். ஆனால் அவருக்கு ஹிட்லர் முரட்டுக் கொள்கைகளில் சம்மதம் இல்லை. யூதர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள் என்று அவர் நினைக்கவில்லை.

அப்போது ஷிண்ட்லரின் தொழிற்சாலையில் ஏகப்பட்ட யூதர்கள் வேலைபார்த்துக் கொண்டிருந்தார்கள். கொஞ்சம் அசந்தால் இவர்களையெல்லாம் நாஜிப் படைகள் கொத்து பரோட்டா போட்டு விடும் என்கிற நிலைமை.

ஷிண்ட்லர் நினைத்திருந்தால் யூதத் தொழிலாளர்களை மொத்தமாக டிஸ்மிஸ் செய்துவிட்டு உள்ளூர் மண்ணின் மைந்தர்களை வேலைக்குச் சேர்த்துக் கொண்டிருக்கலாம். அவர் அப்படிச் செய்திருந்தால்ஹிட்லர்கையால் ஜேர்மன் ரத்னா விருது கூடக்கொடுத்துக்கொண்டாடியிருப்பார்கள்.

ஆனால் ஷிண்டலர் மனிதர்களை ஜேர்மனியர்கள்யூதர்கள் என்று பிரித்துப் பார்க்கவில்லை தன்னிடம் வேலை செய்கிற யூதர்களை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று தீர்மானித்தவர். அதற்காக எப்பேர்ப்பட்ட பொய் பித்த லாட்டம் தகிடுதத்தங்களையும் செய்யத் தயாராக இருந்தார்.

நாலு பேருக்கு நல்லது நடக்கும் என்றால் எதுவும் தப்பில்லை என்கிற அதே சினிமா ஃபார்முலாதான். ஆனால் ஆஸ்கர் ஷிண்ட்லர் அதை நிஜத்தில் செய்தார். பல நூறு யூதர்கள் அவரால் உயிர் பிழைத்தார்கள்.

ஷிண்ட்லரைப்போலவே ஹிட்லர் காலத்து ஜேர்மனியில் யூதர்களைக் காப்பாற்றுவதற்கு உதவிய இன்னொரு ஹீரோ ஃப்ரான்ஸிஸ் எவ்வர்ட்ஃபோலி. இவர் இங்கிலாந்து உளவு நிறுவனமாக SIS இன் ஏஜென்ட். பொதுவாக உளவாளிகளை வெளிநாட்டுக்கு அனுப்புகிறபோது பாதுகாப்புக்காக ஒரு மாறுவேடம் போட்டுத் தான் அனுப்புவார்கள்.

மாறுவேடம்என்றால் ஒட்டுத் தாடி, கன்னத்தில் மாங்கா மச்சம் தலையில் தொப்பி வைப்பது இல்லை. அந்த உளவாளியின் பெயர், சொந்த ஊர், வேலை இப்படி சகலத்தையும் மறைத்து வேறு ஒரு புதிய அடையாளத்தை உருவாக்குவது. அவர் எதற்காக வெளிநாடு போகிறார் என்கிற உண்மையான நோக்கத்தை மறைப்பது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈஸ்டர் தாக்குதல்...

இதுகுறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் தற்போது விசாரணைகள் நியாயமாக முன்னெடுக்கப்பட்டு வருவதை கர்தினால் மல்கம் ரஞ்சித் உள்ளிட்ட அனைவரும் அறிவார்கள்.

கடந்த காலங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், சட்டரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

ஆனால், இன்று சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது என்ற நம்பிக்கை அனைவர் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது.

எனவே ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் யார்? என்பதை வெளிப்படுத்த நீண்ட காலம் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்றார். (ந-7)

## இனியபாரதியின்...

விக்னேஸ்வரன் சந்தேகத்தின் அடிப்படையில் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார். (ந-7)

## தீயில் எரிந்த...

சேவியர் என்ற வயோதிபரே இவ்வாறு எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

குறித்த வயோதிபர் வாழ்ந்த வீட்டில் இருந்து புகை வெளிவருவதை வீதியால் சென்ற அவரது உறவினர் அவதானித்து வீட்டின் உள்ளே சென்று பார்த்தபோது குறித்த விபரீதத்தை கண்டு உடனடியாக ஊரவர்களை அழைத்து குறித்த முதியவரை மீட்க முயற்சித்துள்ளார்.

ஆயினும் குறித்த முதியவர் தீயில் கருகி ஏற்கெனவே இறந்து விட்டதாகத் தெரிய வருகிறது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் கிராமசேவகர் மற்றும் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டதுடன்,

சம்பவ இடத்துக்கு வருகை தந்த தீவகப் பிரதேச மரணவிசாரணை அதிகாரி என்.தியாகராசா சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு அறுவுறுத்தினார்.

கடந்த சில மாதங்களாக குறித்த முதியவர் நடக்க முடியாத நிலையில் தனது வீட்டில் தனிமையில் வாழ்ந்து வந்துள்ளார்.

புகைப்பிடிக்கும் பழக்கம் கொண்ட குறித்த முதியவர் பாவித்த பீடியின் மூலம் அவர் உறங்கும் மெத்தையில் ஏற்பட்ட தீயின் காரணமாகவே இந்த மரணம் ஏற்பட்டிருக்கலாம் என முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர். (ந-7,104)

## இரு பொலிஸ்...

ஒருவருமே இவ்வாறு பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 66 வயதுடைய ஒருவர் சிறைக்கூடத்தில் உயிரை மாய்த்துக் கொண்டமை தொடர்பில் கிளிநொச்சி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரினால் முன்னெடுக்கப்பட்ட முதற்கட்ட விசாரணைகளையடுத்து, குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் இருவரும் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். (ந-7)

## புதிய பிரதம...

செயற்பட்ட முர்து நிருபா பிந்துஷினி பெர்னாண்டோ ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து வெற்றிடமாக இருந்த பதவிக்கு ஜனாதிபதி பரிந்துரைத்த ப்ரீத்தி பத்மன் சூரசேனவின் பெயரை அரசியலமைப்புச் சபை அண்மையில் அங்கீகரித்திருந்தது.

1989ஆம் ஆண்டு சட்டத்தரணியாகப் பதவியேற்ற ப்ரீத்தி பத்மன் சூரசேன, பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்து அரச தரப்புச் சட்டத்தரணியாகப் பணியாற்றி 2007ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

2016ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்ட அவர், 2018ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவராகவும் 2019ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற நீதியரசராகவும் நியமிக்கப்பட்டார். (ந-7)

## மோ.சைக்கிள்...

அதிகாலை திருகோணமலையில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்தவேளை, வவுனியா பரசங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த ஜெயசீலன் திவாகரன் (வயது-23) என்ற இளம் கணித பாட ஆசிரியரே இவ்வாறு உயிரிழந்தவராவார் என புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ந-7,250)

## நல்லூ...

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமியார் ஆலய மகோற்சவம் நாளை (29) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

நாளை காலை 10 மணிக்கு கொடியேற்றம் இடம்பெற்று தொடர்ந்து 25 நாட்கள் மகோற்சவம் இடம்பெறும். (ந-7)

## இனங்...

இந்த அகழ்வுகள், நீதிமன்றத்தால் “தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01” மற்றும் “இல - 02” என அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வருகின்றன. இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்காக 45 நாட்கள் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், நேற்றைய தினம் 22 ஆவது நாளாக பணி முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 7 நாட்களில் 36 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதுவரை 101 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதில் 95 தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் நேற்று அகழ்ந்தெடுக்கப்பட்ட எலும்புகளுடன் இருந்த ஒரு பொலித்தீன் பை, மேலதிக ஆய்விற்காக சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புதைகுழிகளில் இருந்து புத்தகப்பை, பொம்மை, சிறுவர்களுடைய காலணிகள், வளையல்கள், பால் போச்சி உள்ளிட்ட 46 சான்றுப் பொருட்கள் மீட்கப்பட்டு அவை சான்றுப் பொருட்களாக அடையாளப்படுத்தப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளன. (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.07.27
சீட்டிழுப்பு இலக்கம் 5903
U 2 8 0 2 6 9
அத சம்பத U 0 2 6 9
சீட்டிழுப்பு இலக்கம் 478

சுப தவசக
திகதி 2025.07.27
சீட்டிழுப்பு இலக்கம் 0919
மேடம் 04 12 36 51

தன நிதானய
திகதி - 2025.07.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1933
R 37 40 50 62 R
Double Chance 96396

மெகா பவர்
திகதி 27/07/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2251
O 25 11 38 61 78

ஜய
திகதி 2025.07.27
சீட்டிழுப்பு இலக்கம் 0171
A 5 2 7 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4145
சீட்டிழுப்பு திகதி 27.07.2025
U 11 15 36 73
U

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.07.27
சீட்டிழுப்பு இலக்கம் 1212
சிம்மம் 22 26 28 29 சிம்மம்
44510 41

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
27.07.2025 வெற்றி வாரம் 0611
L 0 5 6 7 5 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,699,034.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2877
சீட்டிழுப்பு திகதி 2025.07.27 ஞாயிற்றுக்கிழமை
37 61 67 70 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,359,726.40

சனிதா
திகதி 27.07.2025 வெற்றி வாரம் 5038
28 43 56 80 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,182,376.00

சசிரி
வெற்றி வாரம் 735
சீட்டிழுப்பு திகதி 27.07.2025 ஞாயிற்றுக்கிழமை
23 26 33
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4589
சீட்டிழுப்பு திகதி 27.07.2025 ஞாயிற்றுக்கிழமை
12 56 60 61
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,154,918.00

லக்பிம
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 11 05 07 38 50
2053
27.07.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.584,598,319.20

அட கோடீஸ்வரர் ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2703
சீட்டிழுப்பு திகதி: 2025.07.27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.76,072,320.00
02 45 66 75 O

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோமரட்ண ...

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

300 முதல் 600 வரையிலான பேரைக் கொலை செய்து எங்களிடம் மேலதிகாரிகள் தருவார்கள் - தந்தார்கள். இங்கு கொண்டுவந்து அவர்களைப் புதைத்திருக்கின்றோம் என அவர் சாட்சியம் வழங்கியிருந்தார்.

அதன் பின்னர் சர்வதேச அமைப்புகள் சர்வதேச மன்னிப்புச்சபை போன்றன மேற்கொண்ட முயற்சிகள் மூலம் 99ம் ஆண்டு அகழ்வுப் பணியை மேற்கொண்டு சுமார் 19 எலும்புக்கூடுகளை அப்போது கண்டுபிடித்திருந்தார்கள்.

அதுமட்டுமின்றி இன்று கட்டிடங்களிற்கான அகழ்வு வேலை இடம்பெற்றபோது சில மனிதஎச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதற்கான வழக்குத்தொடுக்கப்பட்டு பின் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, நேற்றுவரை 90 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது ஒரு இனஅழிப்பின் சான்றாக, ஒரு இனத்தின் மேல் நிகழ்த்தப்பட்ட பெரும் கொலையாக நாங்கள் பார்க்கவேண்டும். சிங்களச் சகோதரர்கள் எங்களுடன் பேசும்போது, தர்க்கம் செய்யும்போது விடுதலைப்புலிகளின் கொலைகளைப் பற்றியெல்லாம் பேசுகின்றார்கள்.

அதுவல்ல இங்கு பிரச்சினை. விடுதலைப்புலிகளை அரசாங்கம் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தியுள்ளது. பாதுகாப்புப் படையினர் என்ற பெயரில் மக்களைப் பாதுகாக்க வந்தவர்கள் கொலை செய்திருந்தால், அது மிகப்பெரிய தண்டனைக்குரிய குற்றம் என்பதை மறந்துவிடக்கூடாது.

இந்த நாட்டில் இராணுவத்தினர் வெற்றிவீரர்களாகக் கொண்டாடப்படுகின்றனர். இதே நாட்டின் பிரஜைகளைக் கொன்றொழித்தவர்களை எவ்வாறு வெற்றிவீரர்களாகக் கொண்டாடுவது என்ற கேள்வி ஒரு சமூகத்திற்கு இருக்கின்றது.

எனவே அந்த அடிப்படையில், சோமரட்ண ராஜபக்ச உயிரோடு இருக்கின்றார். உத்தரவிட்ட உயர் அதிகாரிகள் இருக்கின்றார்கள். அவர்களிற்கு எல்லாம் தலைமை தாங்கக்கூடிய முப்படைத் தளபதியாக இன்றைய ஜனாதிபதியிருக்கின்றார். எனவே இதற்கான விசாரணைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.

இந்தப் பாரிய குற்றங்களை இழைத்தவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும்.

இதற்காக உள்நாட்டுப் பொறிமுறை சரியான விதத்தில் வேலை செய்யவில்லை எனத் தமிழ் மக்களாகிய நாங்கள் உணர்கின்றோம். இங்கிருக்கும் மலையகச் சகோதரர்கள் அதனை உணர்கின்றார்கள். எனவேதான் சர்வதேச நீதி விசாரணையொன்று அவசியம் என நாங்கள் வலியுறுத்துகின்றோம் என்றார். (ந-7)

# நாட்டின் எரிபொருள் நுகர்வு சுமார் 30 சதவீதத்தால் குறைவு

## வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி

நாட்டில் மொத்த எரிபொருள் நுகர்வு சுமார் 30 சதவீதம் குறைந்துள்ளதாக வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும், மின்சார உற்பத்திக்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றலை அதிகளவில் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இலங்கையில் 70% மின்சாரத்தை 2030 ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களில் இருந்து பெறுவதற்கு அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாகவும் இதற்காக சூரிய, காற்று, நீர் மற்றும் உயிரி ஆற்றல் வளங்களைப் பயன்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)


உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம் •சாவகச்சேரி •மானிப்பாய் •நெல்லியடி •பருத்தித்துறை •திருகோணமலை •வல்வெட்டித்துறை •கோப்பாய் •புத்தூர் •பண்டத்தரிப்பு •சங்கானை •கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3514)

ஆண்/பெண் விற்பனையாளர்கள்தேவை
எமது பிடவை நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள O/L, A/L படித்த விற்பனையாளர்கள் தேவை.
மதிய உணவுடன் கூடிய சம்பளம் வழங்கப்படும்.
நேரில் வருகை தரவும்.
சிவகணேசன் TEX
41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(4920)

Makeup & Aari work
❖ Bridal Makeup
❖ Guest Makeup
❖ Party Makeup
❖ Aari work (Saree Blouse)
என்பன சிறந்த முறையில் செய்து தரப்படும்.
075 206 0662
(4919)


மணமகள் தேவை
1978, கேட்டை நட்சத்திரம் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு
075 617 8008
(4918)

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3950/-
11-16 Kg 2650/-
21-27 Kg 2470/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
(C-3514)
UK 11Kg - 1400/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2000/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2145/- Italy 11Kg - 2260/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3515)
076 825 7716 (ஆகாஸ்)


# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 - 04 - 1952 | 27 - 07 - 2025 |



## நமசிவாயம் முத்துலிங்கம்

(ஓய்வுபெற்ற சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திச்சங்க களஞ்சியப் பொறுப்பாளர்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் முத்துலிங்கம் அவர்கள் நேற்று 27.07.2025 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் - இராசலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராமசாமி(அப்பர்) - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் நிர்மலாதேவி அவர்களின் அன்புக் கணவரும் பாபுஜி, சஜீவன் (சிறைச்சாலை உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்), சங்கீதா(உதவிப்பிரதேச செயலாளர் -சண்டிலிப்பாய்), நிரோஜன்(பொலிஸ் உத்தியோகத்தர் - வல்வெட்டித்துறை), கார்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும் கோகிலதர்சன், டிலக்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கவிநிலா அவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28.07.2025 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பண்ணாகத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

தகவல் : குடும்பத்தினர்
077 400 2202
(4921)


மணப்பெண் தேவை
01.கரவெட்டி, இந்து, 1993, பூரட்டாதி, Graduate, Civil Engineer, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
02.அளவெட்டி, இந்து, 1989, பரணி, Senior Software Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
03.கொல்லன்கலட்டி - புன்னாலைக்கட்டுவன், இந்து, 1991, அனுஷம், Msc, Denmark Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
04.மட்டுவில் - மீசாலை, இந்து, 1985, கேட்டை, Computer Engineer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
05.காரைநகர், இந்து, 1988, பரணி, Masters Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
06.இணுவில், இந்து, 1986, ரோகிணி, Bachelor Of IT, Norway Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
07.மானிப்பாய் - அச்சுவேலி, இந்து, 1987, பரணி, CIMA + Charted Accountant, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
08.காரைநகர் - நவாலி, இந்து, 1992, சுவாதி, Graduate, New Zerland + Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
09.குப்பிளான் - கொக்குவில், இந்து, 1990, கேட்டை, MBA Phd Director Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
10.மண்டைதீவு, இந்து, 1989, மூலம், MBBS Doctor, மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.
(1374)
S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தா[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org